


தனிப் பிரதி ரூ. 10/–
ஆண்டுச் சந்தா ரூ. 100/–
ஆயுள் சந்தா ரூ. 1000/–


# அன்பு பகிர்வு இயக்கம்


மலர் : 11 / இதழ் : 6 / ஏப்ரல் – 2015


## செய்திமலர்

"எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும்,
மூன்றாம்நாளில்
மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவும்
வேண்டியதாயிருந்தது;
அன்றியும் மனந்திரும்புதலும்
பாவமன்னிப்பும் எருசலேம்
தொடங்கிச் சகல தேசத்தாருக்கும்
அவருடைய நாமத்தினாலே
பிரசங்கிக்கப்படவும் வேண்டியது.
நீங்கள் இவைகளுக்குச்
சாட்சிகளாயிருக்கிறீர்கள்". லூக்கா 24 : 46 - 48


ஆசிரியர். பேராயர். வே. தேவதாஸ்

சுதேச ஊழியரின் சாட்சி

# போதகர். துல்லா கராசியா

## ரோகன்யா மன்னா, இராஜஸ்தான்



என்னுடைய பெயர் துல்லா கராசியா. நான் பீல் ஆதிவாசி குடும்பத்தைச் சேர்ந்தவன். நான் இயேசுவை அறியாததற்கு முன்பு பாவமான வாழ்க்கை வாழ்ந்து வந்தேன். அசுத்த ஆவியின் கட்டுகளினால் எனது மனைவி 5 வருடமாக வியாதியில் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தாள். நான் மந்திரவாதிகளிடம் சென்று பூஜை செய்தும், ரூ. 70,000 வரை செலவழித்து மருத்துவம் செய்தும் ஒரு பலனுமில்லை.

இந்த சமயத்தில் சகோ. கிர்ஜிபாய் என்ற விசுவாசி கும்புரா கிராமத்திலுள்ள ஷாலோம் சபைக்கு அழைத்துச் சென்றார். அச்சபையின் போதகர் சகோ. பத்தியாபாய் இயேசுவைப் பற்றிக் கூறி ஜெபிக்கவே எனது மனைவிக்கு பூரண விடுதலை கிடைத்தது. இந்த அற்புதத்தின் மூலமாக நான் இரட்சிக்கப்பட்டு தொடர்ந்து சபை ஆராதனைகளில் கலந்து ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்து வந்தேன். 2004ம் வருடம் ஞானஸ்நானம் பெற்று ஜெபிக்கின்ற வேளையில் நான் மலைப்பகுதிகளில் ஊழியம் செய்து கொண்டிருப்பது போல் தரிசனம் கிடைத்தது.

இந்த தரிசனத்திற்குக் கீழ்ப்படிந்து நான் ஷாலோம் ஊழியத்தில் இணைந்து என்னுடைய சொந்த கிராமமாகிய ரோகன்யா மன்னாவில் ஊழியம் செய்ய ஆரம்பித்தேன். ஆரம்ப காலத்தில் மிக அதிகமான எதிர்ப்புகளின் மத்தியிலும் நான்கு குடும்பத்தினர் ஆண்டவரை ஏற்றுக் கொண்டனர். நான் ஷாலோம் மூலமாக ICT 1 வருட வேதாகம பயிற்சியும், பணித்தள ஊழியங்கள் பற்றிய பயிற்சியும் பெற்றேன். தற்போது 25க்கும் அதிகமான குடும்பத்தினர் வாரம்தோறும் சபையில் தேவனை ஆராதனை செய்து வருகின்றனர்.

இந்த சுதேச ஊழியரை ஜெபித்துத் தாங்குவோர் : **Salvation Missionary Ministries,** Hosur.

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் இதுவரையில் 500 க்கும் அதிகமான பீல் ஆதிவாசி சுதேச ஊழியர்களை எழுப்பி, பயிற்றுவித்து 600 க்கும் அதிகமான ஸ்தல சபைகளை உருவாக்கியுள்ளோம். இவ்வருடத்தில் 200 புதிய சுதேச ஊழியர்களை எழுப்ப தேவன் கிருபை தருகிறார். குடும்பமாக, சபையாக, குழுவாக மாதம் ரூ. 2500/– ஜெபித்துக் கொடுத்துத் தாங்க முன் வாருங்கள். பாரதமெங்கும் வீட்டிற்கு ஒரு நற்செய்திப் பணியாளரைத் தாங்குவோம். தேசம் தேவனை அறியட்டும்! அல்லேலூயா!

## உங்கள் சகோதரனிடமிருந்து



**ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுவின் நாமத்தில் எங்கள் அன்பின் வாழ்த்துக்களை பணித்தளத்திலிருந்து தெரிவிப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.** கர்த்தர்தாமே கடந்த மார்ச் மாதம் முழுவதும் பீல் மக்கள் மத்தியில் நடைபெற்ற ஊழியங்களை, குறிப்பாக அனைத்துக் கூட்டங்களிலும் தேவனுடைய வல்லமை வெளிப்படும்படி கிருபைத் தந்தார். பீல் மக்களையும், ஷாலோம் ஊழியங்களையும் நேசித்து, ஜெபித்து தாங்கி வருகிற உங்களுக்காகத் தேவனைத் துதித்து, உங்களுக்கு என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

**40 நாள் உபவாசம்**

கடந்த மார்ச் மாதம் முழுவதும் விசேஷமாக 40 நாட்கள் உபவாசித்து ஜெபிக்கும்படியாகவும், தேவனோடு அதிகமாக உறவாடவும், தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றவும் தேவன் கிருபைத் தந்தார். குறிப்பாக பல ஆயிரம் விசுவாசி குடும்பங்கள் மற்றும் அனைத்து பீல் சுதேச ஊழியர் எங்களுடன் இணைந்து 40 நாட்கள் பீல் மக்களின் எழுப்புதலுக்காகவும், அனைத்து திருச்சபைகளின் எழுப்புதலுக்காகவும், நம் பாரத தேசத்தின் எழுப்புதலுக்காகவும் ஜெபிக்கிறார்கள். தேவனுக்கே மகிமை!

**இயேசுவின் பாடு மற்றும் உயிர்த்தெழுதல் ஆராதனைகள்**

இந்த மாத இதழ் உங்கள் கரங்களில் கிடைக்கும்போது, குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் மாநிலங்களில் ஷாலோம் சபைகளில் நடைபெறும் பாடுபட்ட வாரத்தின் (Passion Week) அனைத்து சிறப்பு கூட்டங்களுக்காகவும் ஜெபிக்கும்படியாக கேட்கிறேன். விசேஷமாக அந்த வாரத்தில் ஷாலோம் சபைகளில் நடைபெறும் ஞானஸ்நான ஆராதனைக்காகவும், அநேக இடங்களில் நடைபெறும் இராப்போஜன ஆராதனையில் முதன் முறையாக கலந்துக் கொள்ளும் விசுவாசிகளுக்காகவும், கிறிஸ்துவின் மரணத்தை (பெரிய வெள்ளி அன்று) நினைவுகூர்ந்து அனைவரும் கல்வாரி அன்பினால் நிரப்பப்படவும், அதைத் தொடர்ந்து உயிர்ந்தெழுந்த திருநாள் ஆராதனையில் உயிர்த்தெழுந்த தேவனை ஆராதிப்பது மட்டுமல்லாமல், சுவிசேஷத்தை பிரசங்கிக்கிறவர்களாகவும், கிறிஸ்துவின் சாட்சியாகவும் அனைத்து ஷாலோம் சபையின் விசுவாசிகள் விளங்கவும் ஜெபியுங்கள்.

**CBC ஆசிரியர் மற்றும் இயக்குனர்கள் பயிற்சி**

ஏப்ரல் மாதம் கடைசி வாரத்தில் நடைபெற உள்ள CBC ஆசிரியர்கள், இயக்குனர்கள் பயிற்சிக்கு குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் மாநிலங்களிலிருந்து கலந்துக் கொள்ளும் 1200க்கும் அதிகமான ஆசிரியர்கள் மற்றும் இயக்குனர்களுக்காக ஜெபியுங்கள். CBC –யில் பங்குபெறும் 40,000 மாணவர்களுக்கான புத்தகம், ஆசிரியர் கையேடு, பாடல் புத்தகம், ஒலி, ஒளி நாடா மற்றும் இதர உபகரணங்கள் சரியான நேரத்தில் ஆயத்தமாக்கப்பட்டு, கிடைக்கப் பெற ஜெபியுங்கள், CBC –க்கு ஒரு மாணவனுக்கு ரூ.20/– வீதம் 40,000 மாணவர்களுக்கு தேவையான ரூ. 8 இலட்சங்கள் கிடைக்கப்பெற ஜெபியுங்கள். நீங்களும் உங்கள் குடும்பத்தின் சார்பிலும், சபையின் சார்பிலும் உங்களால் முடிந்த அளவுக்கு மாணவர்களை ஜெபித்து தாங்கும்படி அன்புடன் கேட்கிறேன்.

**ஷாலோம் கிராம ஆலய பிரதிஷ்டை**

கர்த்தருக்கு சித்தமானால் 3 மாநிலங்களில் கட்டப்பட்டு வரும் ஆலயங்களில் குறைந்தது 10 கிராம ஆலயங்கள் ஏப்ரல் மாதத்தில் பிரதிஷ்டை செய்யப்பட ஆயத்தப்பட்டு வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறேன். மேலும் ஆலய பிரதிஷ்டை ஆராதனைக்காகவும், பணித்தளத்தைப் பார்வையிட்டு ஊழியம் செய்யவும் தமிழ்நாட்டிலிருந்து வர இருக்கும் தேவபிள்ளைகளுக்கு ஒவ்வொரு கிராமத்திலும் தேவன் நல்ல பாதுகாவல் தரவும், அனைவரும் ஆத்தும பாரத்தினால் நிரப்பப்பட்டு இன்னும் ஜெபித்து ஷாலோம் ஊழியத்தை தாங்குகிறவர்களாகவும் வளர ஜெபியுங்கள்.

**அரசு தேர்வு எழுதும் மாணவ, மாணவிகள்**

தேவனுடைய கிருபையால் உங்கள் யாவருடைய ஜெபங்களினாலும், ஆதரவினாலும் மூன்று மாநிலங்களில் அனைத்து ஷாலோம் சபை விசுவாச குடும்பத்தின் சார்பாக சுமார் 1000க்கும் அதிகமான பிள்ளைகள் 10, 11, +2 தேர்வு எழுதுகிறார்கள். அவர்கள் நல்ல மதிப்பெண்கள் எடுத்து, உயர்கல்வி கற்று சமுதாயத்தில் நல்ல வேலைக் கிடைக்க ஜெபியுங்கள். இந்த மாணவ மாணவிகளுக்கு அதற்கான நிதி உதவி கிடைக்கப்பெற ஜெபியுங்கள்.

**ஷாலோம் சபைகளுக்கு இசைக்கருவி மற்றும் ஒலிபெருக்கி சாதனம்**

கர்த்தருக்கு சித்தமானால் குறைந்தது 300 கிராம ஷாலோம் சபைகளுக்கு குறிப்பாக, மின்சார வசதியில்லாத கிராமங்களுக்கு ஒலிபெருக்கி சாதனம் மற்றும் இசைக்கருவி அதாவது, ரூ. 6500/– மதிப்புள்ள ஒலிபெருக்கி சாதனம் மற்றும் ரூ. 3500/– மதிப்புள்ள கிராமிய இசைக்கருவி (மொத்தம் ரூ.10000/– மதிப்பில்) வழங்குவதற்கு ஜெபத்துடன் தீர்மானித்துள்ளோம். உங்களில் சிலர் இதற்காக மனமுவந்து ரூ. 10000/– அனுப்பியுள்ளீர்கள். எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். உயிர்த்தெழுந்த திருநாள் அன்று கொடுக்கப்பட உள்ளது. மேலும் கர்த்தர் உங்கள் மனதை ஏவுவாரானால் ஒரு இசைக்கருவி மற்றும் ஒலிபெருக்கி சாதனங்கள் வாங்க ரூ.10000/– அல்லது அதற்கு அதிகமான இசைக்கருவி மற்றும் ஒலிபெருக்கி சாதனம் வாங்கிக் கொடுக்க முன்வாருங்கள். தேவைகள் சந்திக்கப்பட ஜெபித்துக் கொள்ளுங்கள்.

நீங்கள் யாவரும் அறிந்தபடி நம் பாரத தேசத்தில் ஆங்காங்கே திருச்சபைகளுக்கும், சுவிசேஷ பணிகளுக்கும், கர்த்தருடைய பிள்ளைகளுக்கும் விரோதமாக எதிர்ப்புகளையும், தேவையில்லாத பிரச்சனைகளையும் பிசாசானவன் எழுப்பி வருகிறதை காண்கிறோம். அனுதினமும் நம் தேசத்திலுள்ள திருச்சபைகளுக்காகவும், அனைத்து நற்செய்தி பணிகளுக்காகவும் பாரத்துடன் ஜெபிக்க மிக அன்புடன் கேட்கிறேன். குறிப்பாக நம் ஷாலோம் சபைகள், பீல் ஆதிவாசி விசுவாசிகள், எதிர்ப்பு, பிரச்சனைகளின் மத்தியில் தேவனுக்கு சாட்சியாக வாழ ஜெபியுங்கள். மேலும் மூன்று மாநிலங்களிலும் ஷாலோம் திருமண்டலத்தின் திருச்சபை அமைப்பு ஆரம்பிக்கப்பட்டு செயல்படவும், தேவன் பீல் ஆதிவாசி ஊழியர்களை நல்ல தலைவர்களாக உருவாக்கவும் பாரத்துடன் ஜெபியுங்கள்.

**ஷாலோம் புதிய ஊழியர்கள்**

நாளுக்குநாள் இரட்சிக்கப்படுகிறவர்கள் அனுதினமும் சபையில் சேர்க்கப்படுகிறார்கள். புதிய ஊழியர்கள் எழுப்பப்படுகிறார்கள். குறிப்பாக மார்ச் மாதம் 40 புதிய ஷாலோம் புதிய சுதேச ஊழியர்களுக்கு 1 மாத வேதாகமப் பயிற்சியை நிறைவேற்ற தேவன் கிருபைத் தந்தார்.

அனைவரும் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் சொந்த பீல் ஜனம் இரட்சிக்கப்பட வேண்டும் என்ற தரிசனத்துடன் ஊழியம் செய்ய தங்களை அர்ப்பணித்துள்ளனர். இன்னும் இந்த வருடத்தில் 200 புதிய சுதேச ஊழியர்கள் எழுப்பப்பட ஊக்கமாய் ஜெபியுங்கள்.

வளர்ந்து வரும் ஊழியத்தின் திரளான தேவைகள் சந்திக்கப்பட நீங்கள் அனைவரும் ஜெபிக்கும்படி கேட்கிறேன். குறிப்பாக, மாதந்தோறும் ரூ.1000/–, ரூ.500/– இல்லையென்றால் ரூ.100/– கொடுத்து தாங்கும் ஆதரவாளர்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் எழும்ப ஜெபியுங்கள். அனைத்து சபைகளையும் மிஷனெரி பாரம் கொண்டு தாங்கும் ஆதரவாளர்கள் எழும்ப ஜெபியுங்கள். மேலும் ஷாலோம் தன்னார்வ தொண்டர்கள் (Ambassadors) ஒவ்வொரு மாவட்டத்திலும் எழும்ப ஜெபியுங்கள். கர்த்தர் உங்களை ஏவினால் நீங்களும் ஷாலோம் தன்னார்வ தொண்டர்களாக (Ambassadors) ஊழியம் செய்ய முன்வாருங்கள்.

இந்த அன்பு பகிர்வு இயக்க பத்திரிகையில் வரும் செய்திகள், பணித்தள நிகழ்வுகள் மிகவும் பாரத்துடனும், பிரயாசத்துடனும் எழுதி, அதிக பணம் செலவு செய்து அச்சிட்டு, உங்கள் கரங்களில் கொடுக்கிறோம். இந்த பத்திரிகை வாசிக்கிற நீங்கள் ஒவ்வொருவரும் ஊழியத்திற்காக ஜெபித்து, மாதந்தோறும் அல்லது வருடத்திற்கு ஒருமுறையாவது உங்களால் முடிந்த காணிக்கையை அனுப்பும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். அப்படி அனுப்பாத பட்சத்தில் உங்களுக்கு வருகிற அன்பு பகிர்வு இயக்க மலர் நிறுத்தி வைக்கப்படும் என்பதை தயவாய் தெரியப்படுத்துகிறேன்.

ஷாலோம் சேரிட்டி மிஷன் மூலம் நடைபெறும் பள்ளிக்கூடம், ஷாலோம் விடுதிகள், Compass Project, கல்விப் பணிகளுக்காகவும், ஷாரோன் நினைவு மிஷன் மருத்துவமனைக்காகவும், குறிப்பாக டாக்டர். இன்பக்குமார் அவர்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். மேலும் பணித்தள அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர்கள் திறம்பட செயல்பட நல்ல ஞானத்தை தேவன் அருளும்படியாக ஜெபியுங்கள். தலைமை அலுவலகம், கிளை அலுவலகத்தில் ஊழியம் செய்கிறவர்களுக்காகவும், முன்னேற்றப் பணி செய்து வரும் ஊழியர்களுக்காகவும் கருத்தாய் ஜெபியுங்கள்.

மேலும் எனக்காகவும், என் மனைவி வஹிதா தேவதாஸ் அவர்களுக்காவும், டைட்டஸ்– மெர்லின் குடும்பத்திற்காகவும், ஷாலோம், ஷெக்கினாவின் படிப்பிற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். நாங்களும் உங்கள் யாவருக்காகவும் கருத்தாய் ஜெபித்து வருகிறோம். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

**“இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்”. மத்தேயு 28:20**

என்ற வசனத்தின்படி தேவன் தாமே உங்கள் அனைவரோடுங்கூட இருந்து உங்களை வழிநடத்துவாராக.

*தேவ அறுவடைப் பணியில் உங்கள் அன்பு சகோதரன்,*



(பேராயர் **V.** தேவதாஸ்) என்னுடன் தொடர்பு கொள்ள : 09377445468 (குஜராத்)



# உயிர்த்தெழுந்தார் இயேசு

சிறப்புச் செய்தி : **Bishop. V. தேவதாஸ்**

மரித்து உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு என் வாழ்த்துக்கள். இவ்வுலகில் மனுக்குலத்தை இரட்சிக்க பிதாவாகிய தேவனுடைய திட்டப்படி அவருடைய ஒரே பேரான குமாரனாகிய இயேசுவை அனுப்பினார். வேத வாக்கியங்களின்படி அவர் மரித்து அடக்கம்பண்ணப்பட்டு மூன்றாம் நாள் உயிரோடு எழுந்தார். அல்லேலூயா !

இன்னும் உலகத்தில் திறக்கப்பட்ட, காலியாக்கப்பட்ட, ஒரே கல்லறை ஆண்டவராகிய இயேசுவினுடையது. அவர் இன்னும் ஜீவிக்கிறார். மட்டுமல்ல அவர் திரும்ப வரப்போகிறார். இயேசு சொன்னார் “மரித்தேன் ஆனாலும் இதோ சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன். ஆமென் ... மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன். (வெளி. 1:18 ; 22:20) இதில் மூன்று காரியங்களை இயேசு நமக்கு அழகாக சொல்லியிருக்கிறார். (1) நான் மரித்தேன், (2) உயிரோடிருக்கிறேன், (3) சீக்கிரமாய் வருகிறேன் என்பவற்றை சற்று தியானிப்போம்.

***1. இயேசு நமக்காக மரித்தார்***

ஆண்டவராகிய இயேசு இப்பூமியில் வந்து நமக்கு இரட்சிப்பையும், சமாதானத்தையும், ஆசீர்வாதங்களையும் தருவதற்காக அவர் சிலுவையில் மரித்தார். இயேசு சிலுவையில் நம் பாவங்களை சுமந்தார். (I யோவான் 3:5),(I பேதுரு 2:24)

நம் அக்கிரமங்களை சுமந்தார் (ஏசா 53 : 12)

நம் சாபங்களை சுமந்தார் (கலா. 3:13)

நம் நோய்களை சுமந்தார் (மத். 8:17)

நம் பெலவீனங்களை சுமந்தார் (மத். 8:17)

நம் துக்கங்களை சுமந்தார் (ஏசா. 53:4)

நம் பாடுகளை சுமந்தார் (ஏசா. 53:4)

இயேசுவின் சரீரம் முழுவதும் காயங்களும், இரத்தக் கசிவுமாக காணப்பட்டு பாடுகள் அனுபவித்தார். அவர் பட்ட காயங்களை 5 வகையாக காணலாம்.

1, கால்களிலும், கைகளிலும் தாக்கப்பட்டதினால் உண்டான காயங்கள். (சங் 22:16)

2. வாரினால் அடிக்கப்பட்ட காயங்கள் (மத் 27:26)

3. கோலினால் அடிக்கப்பட்ட காயங்கள் (மத் 27:30)

4. முட்களினால் ஏற்பட்ட காயங்கள் (மத். 27:29)

5. ஆணிகளால் உண்டான காயங்கள் (யோவான் 19:18)

அவர் நமக்காக ஜீவனை ஈந்த அந்த சிலுவை காட்சியை நினைவுகூறுவோம். அவர் நம்மில் அன்பு கூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்பு கூறுவோம். இயேசுவின் இரத்தம் நம்மை கழுவி சுத்திகரிக்கட்டும்.

***2. இயேசு உயிரோடு எழுந்தார்***

அவர் இங்கே இல்லை; தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்; கர்த்தரை வைத்த இடத்தை வந்து பாருங்கள் (மத்தேயு 28:6). தம்மை நேசித்து வாரத்தின் முதல் நாள் காலையிலே அதிக இருட்டோடே வந்த மகதலேனா மரியாளுக்கு காட்சி கொடுத்தார். தங்கள் ஜீவனைக் குறித்து பயந்தவர்களாய் பூட்டிய வீட்டில் இருந்த சீஷர்களுக்கு இயேசுதாமே நடுவில் வந்து **"உங்களுக்கு சமாதானம்"** என்று சொல்லி அவர்கள் பயத்தை நீக்கி தம்மை வெளிப்படுத்தினார். விசுவாசமற்ற தோமாவிற்கு மறுபடியும் தம்மை வெளிப்படுத்தினார். சீமோன் பேதுரு தேவனுடைய ஊழியத்தை மறந்துவிட்டு உலக வேலைக்குச் செல்லும் போது தம்மை வெளிப்படுத்தி அற்புதத்தைச் செய்து "என்னை நேசிக்கிறாயா"? என்று கூறி தம்மை வெளிப்படுத்தினார்.

**அவர் பாடுபட்டபின்பு, நாற்பது நாளளவும் அப்போஸ்தலருக்குத் தரிசனமாகி, தேவனுடைய ராஜ்யத்துக்குரியவைகளை அவர்களுடனே பேசி, அநேகம் தெளிவான திருஷ்டாந்தங்களினாலே அவர்களுக்குத் தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார்.** (அப். 1:3) இன்றும் இயேசு நமக்கு தந்த வாக்குத்தத்தம் **"இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன். என்றார். ஆமென்"** (மத். 28:20) "என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்" என்று வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார். "இரண்டு பேர் அல்லது மூன்று பேர் என் (இயேசுவின்) நாமத்தில் கூடும்போது அங்கே அவர்கள் மத்தியில் இருக்கிறேன்" என்று வாக்கு பண்ணியுள்ளார். இன்றும் நம் தனிப்பட்ட வாழ்விலும், குடும்ப வாழ்விலும், நம் வேலைகள், கையின் பிரயாசங்களிலும், நாம் செய்யும் ஊழியங்களிலும் அவர் நம்முடன் இருந்து நம்மை ஆசீர்வதிக்கிற தேவனாக இருக்கிறார். இன்றும் இயேசு ஜீவிக்கிறார்.

மரித்தேன் ஆனாலும் இதோ சதா காலங்களிலும் உயிரோடிருக்கிறேன் என்றார் – இயேசு...

***3. இயேசு சீக்கிரமாய் திரும்பி வருவார்***

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உலகத்தில் வாழ்ந்திருந்த கடைசி நாட்களில் தம் சீஷர்களுடன் உரையாடும்போது அவர் கூறினார் **"நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன்.** (யோவான் 14:3) இயேசு கிறிஸ்து தம்முடைய பிள்ளைகளுக்காக, நமக்காக ஸ்தலத்தை ஆயத்தப்படுத்தும்படி சென்றிருக்கிறார். நிலையில்லாத இவ்வுலகத்தில் வாழும் நமக்கு கைகளால் கட்டப்படாத வாசஸ்தலத்தை உண்டுபண்னி மறுபடியும் அவருடன் நம்மைச் சேர்த்துக் கொள்வார். இந்த பாக்கியம் யாருக்கு? தேவனுடைய பிள்ளைகளுக்கு **"அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்".** (யோவான் 1:12) அவரை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டவர்களுக்குத்தான்.

இரண்டாவதாக அவர் நியாயாதிபதியாக திரும்ப வரப்போகிறார். உயிருள்ளோரையும், மரித்தோரையும் நியாயம்தீர்க்க இயேசு வரப்போகிறார். **"அநியாயஞ் செய்கிறவன் இன்னும் அநியாயஞ் செய்யட்டும்; அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும்; நீதியுள்ளவன் இன்னும் நீதி செய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்."** (வெளி 22:11)

**"இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது".** (வெளி 22:12) முதல் வருகையால் கிருபையுள்ளவராக, விடுதலை தருபவராக, இரட்சிப்பவராக வந்தார். இரண்டாம் வருகையில் நியாயாதிபதியாக வரப்போகிறார். **"ஜீவபுஸ்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக் கடலிலே தள்ளப்பட்டான்".** (வெளி 20:15) மட்டுமல்லாமல் கோபாக்கினைக்கு அவர் அளிக்கும் பலன்களுடன் அவர் வரப்போகிறார். கிறிஸ்துவுக்காக, கலிலேயர்களாக உழைத்தவர்கள், பாடுபட்டவர்கள், சாட்சியாக வாழ்ந்தவர்கள், தேவ ராஜ்ஜியத்தை கட்டினவர்கள், ஆத்தும ஆதாயம் செய்தவர்கள் இப்படி பலருக்கு அளிக்கும் பலன்களுடன் திரும்பவருவார். மத்தேயு 25ம் அதிகாரத்தில் தாலந்தைக் குறித்த இயேசுவின் உவமையும் செம்மறி ஆடு, வெள்ளாடு உவமைகளிலும் அதைப்பற்றிக் கூறியிருக்கிறார்.

***நாமும் ஆயத்தமாவோம்***

இயேசுவின் பிறப்பு, பாடுகள், மரணம், உயிர்த்தெழுதல், அவருடைய வருகை இவைகளை தியானிக்கும் போது நாம் என்ன செய்யவேண்டும். முதலாவது இயேசுகிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு பாவ மன்னிப்புக்கேற்ற ஞானஸ்நானம் பெற்று சபையில் அங்கமாய் இணைந்து அவருடைய பிள்ளைகளாய் வாழவேண்டும்.

அவருடைய பிள்ளைகளாய் வாழும் நமக்கு இயேசு கொடுத்த கட்டளை அன்றியும் மனம் திரும்புதலும் பாவ மன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசிங்கிக்கப்படவும் வேண்டியது.

**நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள்.**

என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார்.

***பிரசங்கிக்க வேண்டும்***

இயேசுகிறிஸ்துவின் பிரதானமான அன்பின் கட்டளை இது. சகல ஜாதிகளுக்கும்,பாஷைக்காரர்களுக்கும் தேசத்தார்களுக்கும் அறிவிக்கப்பட வேண்டும். நம்மைச் சுற்றியுள்ளவர்களுக்கும், தூர இடங்களில் இருக்கிறவர்களுக்கும் நற்செய்தி பணியாளர்களை அனுப்பி ஜெபித்து தாங்கவேண்டும்.

*சாட்சிகளாய் இருங்கள்*

வரப்போகும் இயேசு கிறிஸ்துவுக்கு சாட்சிகளாய் அவரைப் போல் பரிசுத்தராக, அன்பும் மனதுருக்கமுள்ளவர்களாக ஆவியின் கனிகளை கொடுக்கிறவர்களாக உழைக்க வேண்டும். இயேசு சொன்னார்.

நீங்கள் உலகத்திற்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்.

நீங்கள் உலகத்திற்கு உப்பாயிருக்கிறீர்கள்.

நீங்கள் உலகத்திற்கு சாட்சிகளாயிருக்கிறீர்கள்.

*உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிசிக்கப்படுங்கள்*

இரட்சகராகிய இயேசு நம்முடன் என்றென்றைக்கும் இருக்கும்படி வாக்குத்தத்தம்பண்ணின பரிசுத்த ஆவியானவரை அனுப்பினார். **"பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது, நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்".** (அப். 1:8)ன் படி "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து சாட்சிகளாயிருப்பீர்கள்" என்றார். சாட்சியாய் வாழவும், ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணவும், ஜெப ஆவியால், விண்ணப்பத்தின் ஆவியால் நிரப்பப்பட வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியினால் அனுதினமும் நிரப்பப்பட வாஞ்சிப்போம். ஆதி அப்போஸ்தலர் சபை சாதனைகளை போல் சாட்சிகளாய் அவர் வருகைக்கு ஆயத்தமாவோம். மற்றவர்களையும் ஆயத்தப்படுத்துவோம். ஆமென். **"கர்த்தராகிய இயேசுவே வாரும்!"** ஆமென்.

---

**தேவனுக்கே மகிமை!**

தேவனுடைய பெரிதான கிருபையினால் கடந்த மார்ச் மாதம் 7ம் தேதி தூத்துக்குடி **இயேசு அழைக்கிறார் ஜெபக் கோபுரத்தில்** நடைபெற்ற சிறப்புக் கூடுகையில், நமது ஷாலோம் **பேராயர் தேவதாஸ்** அவர்கள் கலந்துக் கொண்டு தேவனுடைய வார்த்தையைப் பகிர்ந்து கொண்டதோடு, ஷாலோம் ஊழியங்களைக் குறித்தும் பகிர்ந்துக் கொண்டு, ஜெபத்தினை ஏறெடுத்தார்கள். இந்த வாய்ப்பினை வழங்கிய இயேசு அழைக்கிறார் ஊழியங்களுக்காக தேவனைத் துதிக்கிறோம்.

## *உங்களுக்காக ஜெபிக்கிறோம்...*



**அன்பான ஆதரவாளர்களே!** உங்களுக்காகவும் உங்களது குடும்பத்திற்காகவும் நாங்கள் தொடர்ந்து ஜெபித்து வருகிறோம். மேலும் உங்களது ஜெபக் குறிப்புகளை **அன்பு பகிர்வு இயக்கம்** தலைமை அலுவலகத்திற்கு கடிதம் மூலமாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ தெரியப்படுத்தினால் நாங்கள் உங்களுக்காக விசேஷமாக ஜெபிக்க ஆயத்தமாயிருக்கிறோம்.
**தொடர்புக்கு : போன் : 9698044522**

# *ஷாலோம் உபவாச ஜெபங்கள்*

நேரம் : ***காலை 10.00 மணி முதல் 1 மணி வரை***

| நாள் | இடம் |
|---|---|
| **11.04.2015,** *சனிக்கிழமை* | M.T.N. பில்டிங், (மகளிர் காவல் நிலையம் அருகில்) வடக்குத் தெரு, **மார்த்தாண்டம்** தொடர்புக்கு: **சகோ. G. செல்வதுரை,** Cell: 94876-89869, **சகோ. ஜார்ஜ்,** Cell: 98944-78405 **சகோ. கிங்பெர்ட்,** Cell: 94868-64820 |
| **18.04.2015,** *சனிக்கிழமை* | எபனேசர் பிளாசா, பரமா நகர், WCC ஜங்சன், **நாகர்கோவில்.** தொடர்புக்கு: **Cell : 9698844511** |
| **25.04.2015,** *சனிக்கிழமை* | No. 102 - 2வது மெயின் ரோடு, சத்யா நகர், பாடி, **சென்னை** தொடர்புக்கு: **சகோ. ஜாண் ஜெயசிங்,** Cell: 9698244577 |

**தூத்துக்குடி தலைமை அலுவலகத்தில் நடைபெறும்**

## வாக்குத்தத்த உபவாச ஜெபக் கூடுகை

நாள் : **01.04.2015 (திங்கட்கிழமை)** நேரம் : **காலை 9.15 முதல் 1.00**

தேவச் செய்தி : ***Prof. C.S.* கிறிஸ்டோபர்,** பாளையங்கோட்டை

இடம் : **அன்பு பகிர்வு இயக்கம், தலைமை அலுவலகம்**

New No. 5A/323, Old.No. 5/168, கால்டுவெல் காலனி 3 வது தெரு, தூத்துக்குடி – 628 008.

**தேவ பிள்ளைகள் அனைவரும் குடும்பமாய் கலந்துக் கொண்டு**
**ஷாலோம் ஊழியங்களுக்காகவும் இந்தியத் தேசத்திற்காகவும் ஜெபித்து**
**தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள அன்பாய் அழைக்கிறோம்.**

## ஷாலோம் 24 மணி நேர சங்கிலித் தொடர் ஜெபம்

நாள் : **25.04.2015** (சனிக்கிழமை)




நேரம் : **நள்ளிரவு 12.00 மணி முதல் மறுநாள்**
**நள்ளிரவு 12.00 மணி வரை (24 மணிநேரம்)**

நீங்களும் பீல் மக்களுக்காகவும், ஷாலோம் ஊழியத்திற்காகவும் ஏதாவது ஒரு மணிநேரம் ஜெபிக்க விரும்பினால் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்கு ஜெபக்குறிப்புகளை அனுப்புகிறோம். தொடர்புக்கு : 9698244522

# அன்பான உண்டியல் ஆதரவாளர்கள் கவனத்திற்கு

*அன்பான உண்டியல் ஆதரவாளர்களே!*



இந்தக் கடிதம் மூலம் உங்களோடு தொடர்பு கொள்வதில் மிக்க மகிழ்ச்சியடைகிறோம். பீல் ஆதிவாசிப் பிள்ளைகள் நன்றாகப் படித்து முன்னேறி வருகிறார்கள். மேலும் ஒவ்வொரு வருடமும் நீங்கள் இந்த பீல் ஆதிவாசி மாணவர்களின் கல்வித் தேவையைச் சந்தித்து வருகின்றதற்காக தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம். எங்களிடமிருந்து பெற்றுக் கொண்ட உண்டியலில் நீங்கள் பீல் ஆதிவாசிச் சிறுவர்களின் கல்விக்காக சேகரித்துள்ள காணிக்கையை இந்தக் கல்வியாண்டின் துவக்கமான **ஜூன் மாதத்திற்குள்** உற்சாகத்தோடு கொடுத்து அவர்களின் தேவைகளைச் சந்திப்பீர்கள் என்று நம்புகிறோம். பீல் ஆதிவாசிப் பிள்ளைகளுக்காக தினமும் ஜெபிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். நாங்கள் உங்களுக்காகவும், உங்கள் குடும்பத்திற்காகவும் அனுதினமும் ஜெபிக்கிறோம்.

நீங்கள் பீல் ஆதிவாசிப் பிள்ளைகளுக்காகக் கொடுக்கும் தொகையை எங்கள் பிரதிநிதிகள் மூலமாகவோ அல்லது உண்டியலைத் திறந்து எடுத்து **M.O., D.D., or Cheque** மூலமாக **Sharing Love Mission** என்ற பெயருக்கு தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்களின் தெளிவான முகவரியுடன், **உண்டியலின் எண்ணையும்** எழுதி அனுப்ப மிக அன்போடு கேட்கிறோம். அதைத் திறக்க சாவி **(Key)** வேண்டுமானால் ***9345675468*** – இந்த செல் நம்பருக்கு தொடர்பு கொள்ளுங்கள். உங்களுக்கு சாவியை **(Key)** அனுப்பி வைக்கிறோம்.



## ஞாயிறு வேதாகமப்பள்ளி ஆசிரியர்கள் கூடுகை

தேவனுடைய பெரிதான கிருபையால் கடந்த ஆண்டு முழுவதும் ஷாலோம் திருச்சபையில் சுமார் 400 இடங்களில் ஞாயிறு வேதாகம பாடசாலை வகுப்புகள் நடைபெறவும், அதன் மூலம் சுமார் 30,000 சிறுவர்கள் கிறிஸ்துவில் வளரவும் தேவன் கிருபைச் செய்தார். கடந்த ஆண்டு இரண்டு மாதத்திற்கு ஒருமுறை ஞாயிறு வேதாகம ஆசிரியர்களுக்கு கூட்டம் நடத்தி அவர்களை பலப்படுத்தவும் தேவன் கிருபைச் செய்தார்.

இந்த வருடம் கடந்த பிப்ரவரி மாதத்தில் 21–ஆம் தேதி இராஜஸ்தானிலும், 28–ஆம் தேதி மத்தியப்பிரதேசத்திலும், மார்ச் 1–ஆம் தேதி குஜராத்திலும் வேதாகம பள்ளி ஆசிரியர்களுக்கு கூட்டம் நடத்தி அவர்களை உற்சாகப்படுத்தும்படியாக தேவன் கிருபைச் செய்தார். பாடல்கள், கதைகள் மற்றும் அறிவுரைகள் வழங்கப்பட்டது. மேலும் ஜெபவேளையில் சிறு பிள்ளைகளைக் குறித்த பாரத்தினால் நிரப்பப்பட்டார்கள். இன்னும் அநேக சிறுவர்களை இயேசுவுக்குள் நடத்த தங்களை அர்ப்பணித்தார்கள்.

தொடர்ந்து இவர்களுக்கு அடுத்த மாதத்தில் 10 நாட்கள் CBC பயிற்சி அளிக்கப்பட உள்ளது. தேவன் இவர்கள் மூலமாக பீல் ஆதிவாசி சிறுவர்களை சந்திக்கும்படியாக, ஜெபித்து கொள்ளுங்கள். **தேவனுக்கே மகிமை!**



ஷாலோம் கிராம சபை, தெல்சர், குஜராத்

நம் பாரத தேசத்தில் பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் ஷாலோம் ஊழியங்கள் மூலம் 500க்கும் மேற்பட்ட சுதேச ஊழியர்களை எழுப்பவும் 600க்கும் அதிகமான சபைகளை உருவாக்கவும் தேவன் கிருபை தந்துள்ளார். சாராயம் காய்ச்சி, குடித்து,வெறித்து, அசுத்த ஆவியால் கட்டப்பட்டு, சாபத்தில் வாழ்ந்த பீல் மக்கள், இயேசுகிறிஸ்துவில் புதுவாழ்வு பெற்று பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தின் நிறைவுடன் பீலி, பிலோடி, வாகுடி பாஷைகளில் கிராமிய இராகங்களில் பாடல்களை இயற்றி டோலக், தபேலா, ஜால்ரா, குகரா, மஞ்சரி, சிங்கி போன்ற இசைக்கருவிகளை மீட்டி தேவனை துதித்துப் பாடுவார்கள். பொது ஆராதனைகளிலும்; விசேஷித்த கூட்டங்களிலும் குறைந்தது 2 மணி நேரம் நடனமாடி துதித்து பின்பு பயபக்தியுடன் தேவ அன்பை உணர்ந்தவர்களாய் ஆராதனை செய்து இறுதியாக கண்ணீருடன் தங்களை தேவனுக்கு ஒப்புக் கொடுப்பார்கள்.



போதகர் வில்சன் சங்காடா, நகரேலா சபை

பெரும்பாலான கிராமங்களில் மின்சார வசதிகள் கிடையாது. ஆகவே மைக், ஆம்பிளிபயர், ஸ்பீக்கர் பாக்ஸ், கீ–போர்ட், கிட்டார் போன்ற இசைக்கருவிகளை பயன்படுத்த முடியாது. சபை ஆத்துமாக்களால் நிரம்பி வழியும் போது பிரசங்கம் செய்யும் வார்த்தை பாடல்களை விசுவாசிகள் கேட்பதும் கஷ்டமாக இருக்கும். குறிப்பாக நானும் என் மனைவியும் செல்லும் அநேக கிராமங்களில் இசைக்கருவிகளும் ஒலி பெருக்கி சாதனங்களும் இல்லாமல் பேட்டரி உள்ளடங்கிய Stranger ஒன்றை பயன்படுத்துகிறோம். இவ்வருடத்தில் ஷாலோம் கிராம சபைகளில் நடைபெறும் ஆராதனைகளை உற்சாகப்படுத்த ரூ. **3500 மதிப்பில்** கிராமிய இசைக்கருவிகளும், ரூ. **6500 மதிப்பில்** பேட்டரியுடன் கூடிய Stranger (ஆம்பிளிபயருடன் கூடிய ஸ்பீக்கர் பாக்ஸ்) ஈஸ்டர் திருநாளுக்குள் வழங்க ஜெபத்துடன் தீர்மானித்துள்ளோம்.

நம் ஷாலோம் சபைகளில் இவ்வருடத்தில் 500 சபைகளுக்கு ரூ. 3500 மதிப்பில் கிராமிய இசைக்கருவிகள் மற்றும் ரூ. 6500 மதிப்பில் பேட்டரி உள்ளடங்கிய Stranger உங்கள் குடும்பத்தின் சார்பில், சபை சார்பில், ஊழியத்தின் சார்பில் ஒன்று அல்லது அதற்கு அதிகமாக ஜெபித்து, வாங்கி வழங்க முன் வாருங்கள். இரண்டும் சேர்த்து ரூ. 10,000 கொடுத்து ஒரு சபைக்கு வழங்கலாம். நீங்கள் கொடுக்கும் காணிக்கை மூலமாக எந்த சபைக்கு, எந்த ஊழியரிடம் இந்த

உபகரணங்கள் வாங்கிக் கொடுக்கப்பட்டுள்ளது என்பதை உங்களுக்கு தெரிவிக்கும்படியாக வீடியோ DVD, போட்டோக்கள் மற்றும் அறிக்கைகள் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

குறிப்பாக பீல் சுதேச ஊழியரைத் தாங்கும் குடும்பத்தார், சபையார், குழுவினர்கள் மற்றும் ஆலயம் கட்டி கொடுத்தவர்கள் உதவி செய்ய முன்வாருங்கள். குறிப்பாக நிதி உதவியை இசைக்கருவிகளுக்கு **ரூ. 3500/–ம்** ஒலி பெருக்கி சாதனத்திற்கு **ரூ. 6500/–ம்** அல்லது இரண்டும் சேர்த்து **ரூ. 10,000 "ஷாலோம் கிராம ஆலய ஆராதனைக்காக"** என குறிப்பிட்டு அனுப்பவும். உபகரணங்களை நாங்கள் இங்கு குஜராத்தில் தாகோத்தில் கியாரண்டியுடன் சர்வீஸ் வசதியுடன் வாங்கி கொடுத்து விடுகிறோம். தேவன் தாமே உங்களை அபரிவிதமாக ஆசீர்வதிப்பாராக!

| | | |
|---|---|---|
| வங்கிக் கணக்கு | : | **SHARING LOVE MISSION (Tuticorin Branch)** |
| TMB வங்கிக் கணக்கு எண் | : | **106100710400009** (I F S Code : TMBL0000106) |
| Axis வங்கிக் கணக்கு எண் | : | **105010100094373** (IFS Code : UTIB0000105) |
| ICICI வங்கிக் கணக்கு எண் | : | **613901112799** (IFS Code : ICIC0006139) |

**"...உங்கள் கிரியையையும், நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ் செய்ததினாலும் செய்து வருகிறதினாலும் தமது நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறந்து விடுகிறதற்கு தேவன் அநீதியுள்ளவரல்லவே."** எபிரெயர் **6:10**

## FORM IV

| | | | |
|---|---|---|---|
| 1. | Place of Publication | : | Thoothukudi |
| 2. | Periodicity of its Publication | : | Monthly |
| 3. | Printer's Name | : | S. Joseph |
| 4. | Address | : | Rajan Press<br>59, Palayamkottai Road,<br>Thoothukudi - 628 002. |
| 5. | Whether the Citizen of India | : | Yes |
| 6. | Publisher's Name | : | V. Devadass |
| 7. | Address | : | New No. 5A/323, Old.No. 5/168,<br>Caldwell Colony, 3rd, Street,<br>Thoothukudi - 628 008. |
| 8. | Editor's Name | : | V. Devadass |
| 9. | Address | : | As above |

I V. Devadoss, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

sd - V. Devadass

Date : 30.03.2015 Signature of Publisher



# எழுந்து கட்டுவோம் வாருங்கள்

தேவனுடைய பெரிதான கிருபையினால் இதுவரை சுமார் 1 இலட்சத்திற்கும் அதிகமான ஆத்துமாக்கள் இயேசு கிறிஸ்துவைச் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு திருச்சபையில் சேர்ந்துள்ளார்கள். இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து திருமுழுக்குப் பெற்றவர்கள் வாரந்தோறும் 700 கிராமங்களில் கூடி ஆராதிக்கிறார்கள். இதுவரை 305 கிராம ஆலயங்கள் கட்டப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. 20.11.2009 அன்று தேவக் கிருபையால் திருச்சபைகள் திருமண்டலமாக (Shalom Diocese In India) உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. தேவனுக்கே மகிமை!

## செய்யவேண்டிய வேலையோ மிகப் பெரியது

தேவக் கிருபையால் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட 500 க்கும் அதிகமான நம் பீல் சுதேச மிஷனெரிகள் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினால் நிரப்பப்பட்டவர்களாய் நற்செய்தியை அறிவித்து பாவங்கள், சாபங்கள் நோய்களிலிருந்து மக்கள் திரளாக கிராமம் கிராமங்களாய் இயேசுவைச் சொந்த இரட்சகராய் ஏற்றுக் கொண்டு ஞானஸ்நானம் பெற்று வருகிறார்கள். 600 க்கும் அதிகமான கிராமங்களில் சபைகள் கூடி ஆராதனை நடைபெற்று வருகிறது. இந்த வருடத்தில் குறைந்தது 100 கிராமங்களில் ஆலயங்களைக் கட்ட திறந்த வாசல்களையும், வாய்ப்புகளையும் தேவன் தந்துள்ளார்.

மேலும் 7000 கிராமங்களில் வாழும் பீல் மக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்க விசேஷ அபிஷேகம் பெற்ற 48 சுதேச ஊழியர்கள் 12 குழுக்களாக மாதந்தோறும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை 48 கிராமங்களில் நடத்துகிற நற்செய்திக் கூட்டங்கள் மூலமாக தேவன் பல அற்புத அடையாளங்களை நடத்தி வருகிறார். அதன் மூலமாக ஒவ்வொரு மாதமும் பல நூறு குடும்பங்கள் தேவனை ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்பட்டு சபையில் சேர்க்கப்பட்டு வருகிறார்கள்.

25 குடும்பங்கள் ஆண்டவரை ஏற்றுக்கொண்ட பின்பு 7 மூப்பர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்படுகிறது. சுதேச ஊழியர் தன்னுடைய நிலத்தை ஆலயம் கட்டுவதற்குக் கொடுக்க முன் வருகிறார்கள். குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் மாநிலங்களில் 30 x 18, 40 x 20, 50 x 20 அளவுகளில் முறையே 2 இலட்சங்கள், 3 இலட்சங்கள், 5 இலட்சங்கள் நிதி உதவி கொடுத்து ஆலயம் கட்டித் தரும் ஆதரவாளர்கள் தேவை. நீங்கள் சபையாக, குழுவாக, குடும்பமாகக் கட்டிக் கொடுக்க முன் வாருங்கள்.



## பணித்தளங்களில் கட்டப்பட்டுவரும் கிராம ஆலயங்களில் ஒரு சில

## 2015 ஆம் வருடத்தில் 100 கிராம ஆலயங்களைக் கட்டி எழுப்ப

- ✞ ரூ. 2 இலட்சங்கள் நிதி உதவி தந்து ஜெபித்துத் தாங்கும் ஆதரவாளர்கள் – 100 பேர்கள் (அல்லது)
- ✞ ரூ. 1 இலட்சம் நிதி உதவி தந்து ஜெபித்துத் தாங்கும் ஆதரவாளர்கள் – 200 பேர்கள் (அல்லது)
- ✞ ரூ. 50,000 நிதி உதவி தந்து ஜெபித்துத் தாங்கும் ஆதரவாளர்கள் – 400 பேர்கள் (அல்லது)
- ✞ ரூ. 20,000 நிதி உதவி தந்து ஜெபித்துத் தாங்கும் ஆதரவாளர்கள் – 1000 பேர்கள் (அல்லது)
- ✞ ரூ. 10,000 நிதி உதவி தந்து ஜெபித்துத் தாங்கும் ஆதரவாளர்கள் – 2000 பேர்கள் (அல்லது)
- ✞ தங்களால் முடிந்த காணிக்கைகளைக் கொடுத்து இந்த தேவத் திட்டத்தை நிறைவேற்றும் ஆதரவாளர்களை தேவன் எழுப்பித் தரும்படியாக ஜெபிப்பதோடு நீங்களும் பங்குப் பெற்று தேவாசீர்வாதம் பெறுங்கள்.
- ☞ உங்கள் சபையில் சிறப்புக் காணிக்கைக் கொடுப்பவர்களை எழுப்பி சபை மூலமாக ஆலயங்களைக் கட்ட முன்வாருங்கள்.
- ☞ உங்கள் குடும்பத்தின் சார்பிலோ அல்லது உங்களது உறவினர்கள் நண்பர்களுக்கு இந்த ஊழியத்தினை அறிமுகம் செய்து ஆலயங்களைக் கட்ட முன் வாருங்கள்.

**ரூ. 3 இலட்சங்கள் மற்றும் ரூ. 2 இலட்சங்கள் கொடுக்கக்கூடிய ஆதரவாளர்களுக்கு தனி கிராம ஆலயம் கொடுக்கப்பட்டு, ஆலய பிரதிஷ்டை DVD மற்றும் புகைப்படங்கள், அறிக்கை ஆகியன அனுப்பி வைக்கப்படும். மற்றநிதியாளர்களுக்கு இணைந்து கட்டப்பட்ட ஆலயத்தின் படங்கள், DVD மற்றும் அறிக்கைகள் அனுப்பி வைக்கப்படும்.**

**நிதி உதவி அனுப்பும் போது *Sharing Love Mission* என்றபெயருக்கு (Tuticorin Branch) D.D. or Cheque எடுத்து 100 கிராம ஆலய கட்டுமானப் பணிக்கான சிறப்பு நிதி என்று குறிப்பிட்டு அனுப்பி வைக்கலாம். மேலும் எங்கள் அலுவலகம், முன்னேற்றப் பணியாளர்கள், பிரதிநிதிகளிடம் கொடுத்து ரசீதைப் பெற்றுக் கொள்ளுங்கள்.**

| | | |
|---|---|---|
| வங்கிக் கணக்கு | : | SHARING LOVE MISSION (Tuticorin Branch) |
| TMB வங்கிக் கணக்கு எண் | : | 106100710400009 (I F S Code : TMBL0000106) |
| Axis வங்கிக் கணக்கு எண் | : | 105010100094373 (IFS Code : UTIB0000105) |
| ICICI வங்கிக் கணக்கு எண் | : | 613901112799 (IFS Code : ICIC0006139) |

# ஷாலோம் சேரிட்டி மிஷன்

**80 G வரிவிலக்கு உண்டு**

## SHALOM CHARITY MISSION

தேவனுடைய பெரிதான கிருபையால் கடந்த 23 ஆண்டுகளாக தேவன் தந்த **Sharing Love Mission** (அன்பு பகிர்வு இயக்கம்) மூலமாக **1 கோடி பீல் ஆதிவாசி மக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கவும், சீஷர்களாக்கவும், ஊழியர்களை எழுப்பவும், சபைகளைக் கட்டவும் தேவன் கிருபை தந்து, ஆயிரம் ஆயிரமாக ஆசீர்வதித்து வருகிறார்.**

அதே வேளையில் நம் **விசுவாசக் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு கல்வி வசதிக்காக** பள்ளிக்கூடங்கள், **விடுதிகள் கட்டப்படவும் மற்றும் சுகாதார மருத்துவத் திட்டங்களும்,** பயிற்சி முகாம்களும் நடத்தப்படவும் வேண்டும். **மேலும் குடிநீர் வசதி செய்து கொடுத்தல், சமுதாய** மேம்பாட்டுத் திட்டங்கள், பொருளாதார வளர்ச்சிக்கானத் திட்டங்கள் போன்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். **குறிப்பாக சுமார் 10 ஆயிரம் பீல் ஆதிவாசி மாணவர்களுக்கு** “கல்வி அறிவு வளர்ச்சி திட்டங்களை” செயல்படுத்த வேண்டும். **இதற்காக Shalom Charity Mission – என்ற இயக்கம் பதிவு செய்யப்பட்டு சமுதாய முன்னேற்றப் பணிகளில் ஈடுபட்டு வருகிறது.**

ஷாலோம் சேரிட்டி மிஷன் மூலமாக ஆரம்பிக்கப்பட்டுள்ள **ஷாலோம் பள்ளிகள், ஷாலோம் விடுதிகள், கல்வி ஆதரவு சேவைகள் மூலமாக சுமார் 1200க்கும் அதிகமான பீல் ஆதிவாசி** மாணவர்கள் **பயன் பெற்று வருகின்றனர். மேலும் ஷாரோன் நினைவு மிஷன் மருத்துவமனை** ஜூலை – 2013ல் ஆரம்பிக்கப்பட்டு Dr. இன்பக்குமார் ஜோசப் அவர்கள் **தலைமையில் மருத்துவப் பணிகளும், இலவச மருத்துவ முகாம்களும் நடைபெற்று வருகின்றன.** CBN ஸ்தாபனத்துடன் **இணைந்து பீல் மக்கள் வசிக்கும் 200க்கும் அதிகமான கிராமங்களில் ஆழ்குழாய் கிணறு – கை பம்புகள் அமைக்கப்பட்டு குடி நீர் வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.**

**இந்த ஷாலோம் சேரிட்டி மிஷன் பணிகளை சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள்** Managing Trustee **ஆகவும் சகோ. கிளாட்சன் டைட்டஸ் அவர்கள்** National Director ஆகவும் பொறுப்பேற்று நடத்தி வருகிறார்கள்.

**மேலும் ஆதிவாசி மாணவர் ஆதரவுத் தொகை, உயர்கல்வி படிப்பிற்கான ஆதரவுத் தொகை, இலக்கியப் பணிக்கான ஆதரவுத் தொகை, மருத்துவப் பணிக்கான ஆதரவுத் தொகை** மற்றும் இதர சமூக சேவை **பணிகளுக்கு நிதி உதவி அனுப்புவோர் Shalom Charity Mission – என்ற பெயருக்கே D.D. or Cheque or M.O. மூலமாகவோ அனுப்ப மிக அன்பாய் கேட்கிறோம். இந்தப் பெயரில் காணிக்கை அனுப்புவோருக்கு 80G வரிவிலக்கு வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.**

| | | |
|---|---|---|
| வங்கி கணக்கு | : | **SHALOM CHARITY MISSION** |
| **Axis** வங்கி கணக்கு எண் | : | **105010100096779 - Tuticorin Branch** |
| **TMB** வங்கி கணக்கு எண் | : | **174100710400061 - Tuticorin Branch** |

# சகோ. ஜான் பிரகாஷ் மற்றும் சகோ. ஹாரீஸ் (சென்னை) ஆகியோரின் பணித்தள வருகை அறிக்கை



கர்த்தருடைய கிருபையால் சென்னையில் கட்டிட கலைஞர்களாக பணியாற்றும் நானும் எனது உதவியாளர் **சகோ. ஹாரீஸ்** அவர்களும் கடந்த மார்ச் மாதம் 10 மற்றும் 11–ம் தேதிகளில் நாங்கள் ஷாலோம் பணித்தள அலுவலகம், மத்தியப்பிரதேசத்தின் அந்தர்வேலியா பயிற்சி மையம், மற்றும் இராஜஸ்தானில் உள்ள நமது பிஜல்பூர் பள்ளி திட்டம் ஆகியவற்றின் கட்டிட அமைப்பை நிர்மானிப்பதற்காக பணித்தளத்தைப் பார்வையிட வந்தோம். 10–ம் தேதியன்று **சகோ. சாமுவேல்** அவர்களுடன் பணித்தள அலுவலகம், பேராயரின் இல்லம், ஷாரோன் மருத்துவமனை, மற்றும் தாகோத் பயிற்சி மையத்தையும் பார்வையிட்டோம். மேலும் குஜராத்திலுள்ள தெல்சர், போரடி, தனசியா, குந்திக்கேடா, ராசரடா, ஜெரி ஆகிய பணித்தளங்களையும் ஆலயங்களையும் பார்வையிட்டோம். தொடர்ந்து மத்தியப்பிரதேசத்திலுள்ள அந்தர்வேலியா ஆலயத்தையும், அங்கு ஊழியர் பயிற்சிக் கூடம் கட்டுவதற்கு இருக்கும் நிலத்தையும் பார்வையிட்டோம். மறுநாள் 11–ம் தேதியன்று இராஜஸ்தானிலுள்ள கோய்கா பேராலயத்தையும், சத்திரக்கூட்டாவிலுள்ள நிலத்தையும் பார்வையிட்டோம். தொடர்ந்து பிஜல்பூரில் நடைபெற்று வரும் பள்ளியையும், மாணவர் விடுதியையும் பார்வையிட்டோம். மேலும் நாங்கள் கொடுத்த ரூ. 2 இலட்சம் காணிக்கை மூலம் குஜராதில் புதிதாகக் கட்டப்பட்ட **லிம்பாகேடி** ஆலயத்தை **பேராயர். தேவதாஸ்** அவர்கள் தலைமையில் பிரதிஷ்டை செய்ய தேவன் கிருபை செய்தார். ஆலயப்பிரதிஷ்டை ஆராதனை மிகவும் ஆசீர்வாதமாக இருந்தது. பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் கலந்து கொண்ட விசுவாசிகள் அனைவரும் நிரப்பப்பட்டார்கள். தேவப் பிரசன்னத்தினால் ஆலயம் நிரம்பியிருந்ததை உணர முடிந்தது.

**ஷாலோம் ஊழியத்தைப் பற்றி**

- ☞ ஷாலோம் ஊழியம், தேவனால் உருவாக்கப்பட்ட ஊழியம் என்பதில் எந்த வித சந்தேகமுமில்லை. அதிலும் பிரத்தியேகமாய் பீல் ஆதிவாசி மக்களின் இரட்சிப்பிற்காக **பேராயர். தேவதாஸ்** அவர்களின் குடும்பத்திற்கு தேவன் தரிசனம் தந்து வழிநடத்தி வருகிறார். மேலும் இவர்கள் உண்மையாய் ஊழியத்தை செய்து வருகிறார்கள்.
- ☞ இந்த பீல் ஆதிவாசி மக்களையே சுதேச ஊழியர்களாய் உருவாக்கி அவர்களை ஊழியத்தில் பயன்படுத்துவது மிகவும் சரியான முறை என்பதை அறிந்து ஆச்சரியமடைந்தோம்.
- ☞ தேவன் இந்த மக்களை எவ்வளவாய் நேசிக்கிறார் என்பதையும், இந்த மக்கள் தேவனை எவ்வளவு அதிகமாய் நேசிக்கிறார்கள் என்பதைக் கண்ணாரக் காண முடிந்தது.
- ☞ ஷாலோம் பணித்தளத்தில் ஆலயம் கட்டும்படியாக நாங்கள் கொடுத்த காணிக்கை, நல்ல நிலத்தில் தான் விதைக்கப்பட்டிருக்கிறது என்பதைக் குறித்து மகிழ்ச்சியடைந்தோம்.

இதை வாசிக்கும் தேவப் பிள்ளைகளே! நீங்களும் ஷாலோம் ஊழியத்திற்காக தினந்தோறும் ஜெபிப்பது மட்டுமன்றி உதாரத்துவமாக கொடுக்கும்படி உங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். **தேவனுக்கே மகிமை!**

## *தேர்வு எழுதும் மாணவர்களுக்கான விசேஷித்த பிரார்த்தனை*



தேவனுடைய பெரிதான கிருபையால் ஷாலோம் விசுவாசி பீல் ஆதிவாசி பிள்ளைகள் தற்போது நன்றாக படித்து முன்னேறி வருகிறார்கள். ஆடு மாடுகளை மேய்த்துக் கொண்டு பள்ளிக்குச் செல்லாமல் மலைகளில் சுற்றித் திரிந்த பிள்ளைகள் இப்போது நன்றாக படித்து முன்னேறி கல்லூரி படிப்பும் வந்து விட்டார்கள். ஒரு காலத்தில் 40% மார்க் கூட எடுக்க முடியாமல் Fail ஆகிக் கொண்டிருந்த பிள்ளைகள் ஷாலோம் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான விசேஷ கூட்டம் நடத்தி ஜெபிக்க ஆரம்பித்த போது இவர்களை தேவன் படிப்படியாக கல்வியில் ஆசீர்வதிக்க ஆரம்பித்தார். இவர்கள் மேல் இருந்த சாபம் மற்றும் பயம், ஞானக்குறைவு எல்லாம் நீங்கி நன்றாக படித்து 50%, 60%, 70% என்று கூட கடந்த வருடம் 80%எடுக்கக்கூடிய அளவு முன்னேறி விட்டார்கள். தேவன் பீல் சிறுவர்களை அபரிவிதமாய் படிப்பில் உயர்த்தி வருகிறார். தேவனுக்கே மகிமை.

இந்த வருடமும் 10, 12, கல்லூரியில் படிக்கும் பிள்ளைகளுக்கென்று விசேஷ கூட்டம் நடத்தப்பட்டுள்ளது. பெப்ரவரி 15–ல் மத்தியப்பிரதேச மாணவர்களுக்கும், பிப்ரவரி 22–ல் இராஜஸ்தானில் உள்ள மாணவர்களுக்கும், மார்ச் 1ம் தேதி குஜராத்தில் உள்ள மாணவர்களுக்கென்றும் நடத்தப்பட்ட விசேஷக் கூட்டத்தில் சுமார் 800க்கும் மேற்பட்ட மாணவர்கள் 3 இராஜ்ஜியத்திலுமிருந்து வந்து பங்கு பெற்றார்கள்.

இந்தக் கூட்டத்தில் சிறப்பு ஆராதனை வேளை நடைபெற்றது. இதனை **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்களும், **சகோ. பிராங்கிளின்** அவர்களும் நடத்தினார்கள். ஆராதனை வேளையில் மாணவர்கள் தேவனைத் துதித்துப் பாடி பரவசமடைந்து ஆவியில் நிரப்பப்பட்டார்கள். தொடர்ந்து கடந்த வருடத்தில் 70%, 80% எடுத்த மாணவர்கள் முன்பாக வந்து சாட்சி பகிர்ந்தார்கள். இதுவும் மற்றவர்களை எழுச்சியூட்டும் வண்ணமாக இருந்தது. பின்பு **சகோ. டைட்டஸ்** மாணவர்களுக்கென்று சிறப்பு அறிவுரைகள் வழங்கினார்கள். தொடர்ந்து பரீட்சைக்கான ஆயத்தங்களை குறித்து **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் விளக்கினார்கள்.

மேலும் **பிஷப். தேவதாஸ்** அவர்கள் மாணவர்களுக்கு வேதத்திலிருந்து வசனத்தைப் போதித்து ஜெபித்தார்கள். வந்திருந்த யாவரும் பரீட்சையை குறித்ததான பயத்திலிருந்து நீங்கி மிகவும் தைரியமாய் உற்சாகமாய் விசுவாசத்தில் பலப்பட்டார்கள். பின்பு இவர்களுக்கு தனித்தனியாக ஜெபித்து பேனா, வசன ஸ்டிக்கர் மற்றும் சாக்லெட் இவர்களுக்கு வழங்கப்பட்டது. வருகிற காலங்களில் தேவன் இந்த இளைய தலைமுறையை ஆசீர்வதித்து உயர்ந்த ஸ்தானத்தில் நிறுத்துவார் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. தொடர்ந்து இவர்களுக்காக ஜெபித்து கொள்ளுங்கள். **தேவனுக்கே மகிமை உண்டாவதாக!**

# தேர்வு எழுதும் பீல் ஆதிவாசி மாணவர்களுக்கு நடத்தப்பட்ட சிறப்பு ஜெபம் - 15,22-02.2015 & 01.03.2015


பாடல் வேளை


துதி & ஆராதனை வேளை



மாணவர்களுக்கு ஆலோசனைகள் வழங்கும் சகோ. டைட்டஸ் அவர்கள்



சாட்சி கூறும் மாணவி


தேவ செய்தியளிக்கும் பேராயர், தேவதாஸ் அவர்கள்


மாணவர்களுக்கு வழங்கப்பட்ட அன்பளிப்புகளுக்கான சிறப்பு ஜெபம்


குஜராத்தில் கலந்து கொண்ட மாணவ மாணவிகள்


மத்தியப்பிரதேசத்தில் கலந்து கொண்ட மாணவ மாணவிகள்


இராஜஸ்தானில் கலந்து கொண்ட மாணவ மாணவிகள்

# சிறுவர் வேதாகம வகுப்பு-2015 CBC (VBS)

பிரியமானவர்களே, நமது ஷாலோம் கிராம சபைகளிலுள்ள பீல் ஆதிவாசி சிறுவர்களைத் தேவன் மிகவும் நேசித்து, தமது கிருபையால் ஆசீர்வதித்து, அவர்களை ஞானத்தினால் நிரப்பி கல்வி அறிவைத் தந்து வருவதால், அவர்கள் இயேசு கிறிஸ்துவைச் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு வேத அறிவிலும் வளர்ந்து வருகின்றனர். இந்தச் சிறுவர்களை ஸ்திரப்படுத்தும்படியாக ஒவ்வொரு ஞாயிறு தோறும் நமது ஷாலோம் திருச்சபைகளில் ஞாயிறு வேதப் பள்ளிகளும், சிறுவர் மற்றும் வாலிபர்களுக்கான சிறப்பு முகாம்கள் ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்பட்டு வருகின்றன.

மேலும் ஒவ்வொரு ஆண்டும் பள்ளி விடுமுறை நாட்களாகிய மே மாதத்தில் சிறுவர் வேதாகமப் பள்ளி (CBC - Children Bible Class) நடத்தப்பட்டு வருகிறது. இந்தப் பள்ளிகளில் ஆயிரமாயிரம் சிறுவர்கள் கலந்துக் கொண்டு ஆசீர்வாதம் பெற்று வருகின்றனர். கடந்த 2014 ஆம் ஆண்டில் "ஜெபமே ஜெயம்" என்ற தலைப்பில் நடத்தப்பட்ட CBC வகுப்புகளில் 30,000க்கும் அதிகமான சிறுவர்கள் கலந்துக் கொண்டு ஆசீர்வதிக்கப்பட்டனர். இதற்கான தேவைகளை சந்தித்து வரும் பங்காளர்களாகிய உங்கள் யாவருக்காகவும் தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

அதே போல் இந்த ஆண்டும் "நிலைத்திரு" என்ற தலைப்பில் 600 கிராமங்களில் 40,000க்கும் அதிகமான சிறுவர்களுக்கு CBC நடத்த ஜெபத்துடன் ஆயத்தப்பட்டு வருகிறோம். இதற்கான தேவைகள் 600 ஆசிரியர்களுக்கானப் பயிற்சிக் கைபேடுகள், 40,000 CBC புத்தகங்கள், Badge. (40,000), பாட்டுப் புத்தகங்கள் (15,000), கலர் பென்சில்கள், ஸ்கெட்ச் பேனாக்கள் (5000 Sets), CBC புத்தகங்கள் நேர்த்தியாக பிரிண்ட் செய்யவும், மற்ற பொருட்கள் கொடுக்கவும் ஒரு குழந்தைக்கு தலா ரூ. 20/– வீதம் 40,000 மாணவர்களுக்கு ரூ. 8 இலட்சங்கள் தேவைப்படுகிறது. இந்தத் தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.

மேலும் உங்கள் குடும்பத்தின் மற்றும் ஊழியத்தின் சார்பில் அல்லது சபையின் சார்பிலோ ஒரு மாணவருக்கு ரூ. 20/– வீதம் உங்களால் முடிந்த அளவிலான காணிக்கையை மாணவர்களுக்குக் கொடுத்து இந்தச் சிறுவர் ஊழியத்தைத் தாங்க முன்வாருங்கள்.

தேவன்தாமே உங்களையும் உங்கள் குடும்பத்தின் பிள்ளைகளையும் ஆசீர்வதிப்பாராக!



கடந்த ஆண்டின் CBC பயிற்சிப் புத்தகங்கள்

...மிகவும் சிறியவராகிய
என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு
நீங்கள் எதைச் செய்தீர்களோ,
அதை எனக்கே செய்தீர்கள்....
- (இயேசு) மத்தேயு 25:40

## ஷாலோம் பெண் ஊழியர்களுக்கான சிறப்புக் கூடுகை - 12,14,17,19 - 02 - 2015


ஆராதனை வேளை


கூடியிருந்த பெண் ஊழியர்களில் ஒரு பகுதியினர்


தேவ செய்தியளிக்கும் சகோதரி. ஷேபா பால்


அன்பளிப்புகள் வழங்கும் Rev. இம்மானுவேல் பால்

## ஞாயிறு வேதாகமப்பள்ளி ஆசிரியர்கள் கூடுகை - 21,28.02.2015 & 01.03.2015


ஆடிப்பாடி தேவனை ஆராதிக்கும் ஞாயிறு பள்ளி ஆசிரியர்கள்


தேவ செய்தியளிக்கும் சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்கள்

## ஷாலோம் பிஜல்பூர் மாணவர்களுக்கு ஒரு நாள் சிறப்பு கூடுகை - 26.02.2015


மாணவர்களுக்கு அன்பளிப்புகளை வழங்கும் சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்கள்


அன்பளிப்புகளைப் பெற்ற மகிழ்ச்சியில் மாணவ மாணவிகள்

# ஷாலோம் அலுவலக ஊழியர்களின் பணித்தள வருகை - (25.02.2015 to 01.03.2015)



கலாச்சார வரவேற்பு



வரம்கேடா – I கிராம சபை ஆராதனையில்



வரம்கேடா – II ஆலயத்திற்கு முன்பு

## இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரம் – அகமதாபாத் கூட்டங்கள் – 7&8–02.2015







கிரீன் சிட்டி ஆலய ஞாயிறு ஆராதனை,
காந்தி நகர், குஜராத் – 08.02.2015



## 27.04.2015 அன்று பிறந்த நாள் காணும் சகோ. பிரைட்டன் ஷாலோம் அவர்களை வாழ்த்துகிறோம்....

27.04.2015 அன்று பிறந்த நாள் காணும் பேராயர் தேவதாஸ் மற்றும் சகோதரி அவர்களுக்கு தேவன் கொடுத்த இரண்டாவது மகன் ***சகோ. பிரைட்டன் ஷாலோம்*** அவர்களை வாழ்த்துகிறோம். தேவன் தாமே ஞானத்தினாலும் பரிசுத்தாவியின் அபிஷேகத்தினாலும் வழி நடத்த ஜெபியுங்கள்.

***Sharing Love Mission,***
***Shalom Charity Mission &***
***Shalom Diocese in India.***

# ஷாலோம் அலுவலக ஊழியர்களின் பணித்தள வருகை அறிக்கை

தேவனுடைய பெரிதான கிருபையினால் 25.02.2015 முதல் 01.03.2015 வரை ஐந்து நாட்கள் குஜராத், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் வசிக்கும் பீல் ஆதிவாசி ஜனங்கள் மத்தியில் நடைபெறும் ஷாலோம் ஊழியங்களைப் பார்க்கும்படி கிருபை செய்தமைக்காக தேவனைத் துதிக்கிறோம்.

எந்த மனுஷருடைய சிந்தைக்கும் எட்டாத தாழ்விடங்களில் வாழுகின்ற பீல் ஆதிவாசி மக்கள் அசுத்த ஆவியின் கட்டுகளிலும் மந்திரவாதிகளின் பிடியிலும், பாவத்திலும் வாழ்ந்து கொள்ளையடிப்பதையும், சாராயம் காய்ச்சுவதையும் தொழிலாகக் கொண்டு ஏன் பிறந்தோம் என்ற காரணம் அறியாமல், வலது கைக்கும் இடது கைக்கும் வித்தியாசம் தெரியாதவர்கள். இறந்த மூதாதையர்களையும், அசுத்த ஆவிகளையும் வணங்குவதுதான் இவர்களது பக்தி.

இன்று இவர்கள் ஷாலோம் ஊழியத்தின் மூலம் இருளைவிட்டு ஒளியினிடத்திற்கும், சாத்தானின் அதிகாரத்திலிருந்து, பாவ சாபத்திலிருந்து, வியாதியிலிருந்து விடுதலையாகி அவர்களின் மனக்கதவு திறக்கப்பட்டு, கிறிஸ்துவின் இரட்சிப்பின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்து கிறிஸ்துவுக்குள் குடும்பமாக வாழ்கிறார்கள். அவர்களுக்காக தேவனைத் துதிக்கிறோம்.

பீல் மக்கள் கிறிஸ்துவை அதிகமாக நேசிக்கிறார்கள் மறுபிறப்படைந்து தேவன் மேல் வைக்கும் விசுவாசத்திலும் தேவன் மேல் வைக்கும் நம்பிக்கையிலும் பரிசுத்த ஆவியினால் உண்டாகும் சந்தோஷத்தோடும் மகிழ்ச்சியான குடும்பமாக தேவனை எளிய இசைக்கருவிகளுடன் பாட்டுப்பாடி நடனமாடி பயபக்தியோடு பல மணி நேரம் ஆராதனை செய்வதையும், கர்த்தருடைய வசனத்தை தியானிப்பதையும் ஆவியில் நிறைந்து ஜெபிப்பதையும், வாலிபர்கள் மிகுந்த உற்சாகத்தோடு ஆராதனைகளில் பங்குபெறுவதையும் பார்த்து நாங்களும் அவர்களோடு கலந்து தேவனை ஆராதித்து மகிமைப்படுத்தினோம். நாங்கள் பார்த்த 15 சபைகளிலும் பீல் மக்களைக் கொண்டே தேவன் பரிசுத்த ஆவியினால் வல்லமையாய் சபைகளை நடத்துகிறார். போதகர்களாகவும், சுவிசேஷகர்களாகவும் இருந்து ஆவியின் வரங்களினால் தேவன் அவர்களை அபிஷேகித்து நடத்துகிறார். சபைகள் வளர்ந்து சீஷர்களுடைய எண்ணிக்கையை தேவன் பெருக்குகிறார். தேவன் கிருபையுள்ள வசனத்தை அடையாளங்களோடும் அற்புதங்களோடும் அவர்களோடு வாசம் பண்ணுகிறவர் நல்ல திட்டங்களைக் கொடுத்து நடத்துகிறார்.

பீல் ஆதிவாசி சிறுவர்கள் தேவனைத் துதித்துப் பாடுவதும் வசனம் சொல்லி ஜெபிப்பதும் மிகுந்த சந்தோஷமாக இருப்பதை அவர்கள் முகத்தில் பார்த்தோம். பிஜல்பூர் கிராமத்தில் ஷாலோம் பள்ளியில் L.K.G. முதல் 8ம் வகுப்பு வரை இருக்கிறது. குறைவான வசதிகள் ஹாஸ்டல் வசதியும் செய்யப்பட்டு இருக்கிறது. குறைவான வசதிகள் மத்தியிலும் அவர்கள் மகிழ்ச்சியாக இருந்து தேவனை மகிமைப்படுத்துகிறார்கள். அதில் பணி புரியும் ஆசிரியர்கள் தியாகத்தோடும் தேவன் கொடுத்த பாரத்தோடும் பிள்ளைகளின் மேல் அன்பு கூர்ந்து

உண்மையாய் பிள்ளைகளை நடத்துகிறார்கள். ஷாலோம் ஊழியத்தின் மூலம் **பேராயர். தேவதாஸ் – சகோதரி. வஹிதா தேவதாஸ்** இருவரும் காடு மேடுகள் எல்லாம் சென்று பல கஷ்டங்களின் மத்தியிலும், கள்ளர்களால் ஏற்படும் பயத்திலும், சாத்தானின் பல போராட்டங்கள் மத்தியிலும், தேவனிடத்திலிருந்து பெற்ற தரிசன ஊழியத்தை மிகுந்த பாரத்தோடு இரவு பகலாக கண் விழித்து நிம்மதியான உறக்கம் அறியாது கர்த்தரிடத்தில் இருந்து பெற்ற ஊழியத்தை தாழ்மையோடு செய்கிறதைப் பார்க்கும் போது தேவன் ஊழியத்தை நேசிக்கிறார். பீல் மக்களை நேசிக்கிறார். பரலோக தேவனுடைய சித்தத்தை பூமியிலே **பேராயர். தேவதாஸ்** அவர்கள் குடும்பத்தைக் கொண்டு செய்து வருகிறார்.

ஊழியர்கள் பயிற்சிக் கூட்டத்தில் கலந்து கொண்டோம். ஆலயக் கட்டுமான பணியில் மிக ஆர்வமாக பீல் மக்கள் செயல்படுகிறார்கள். தண்ணீர் வசதிகள், மின்சார வசதிகள், சாலை வசதிகள், போன்ற அடிப்படை வசதிகள் கூட கிடையாது. இவற்றின் மத்தியிலும் தேவ நாம மகிமைக்காக மிகுந்த மன உற்சாகமாக வாழ்கிறார்கள். தேவனுக்காக ஜீவனுள்ள சாட்சிகளாய் இருக்கிறார்கள்.

இந்த 5 நாட்களும் பீல் மக்கள் மத்தியில் இருந்து பார்த்தது எங்கள் வாழ்க்கையில் மறக்க முடியாத செயலாகும். இதற்காக ஆண்டவரைத் துதிக்கிறோம். இந்த மிகப்பெரிய கிறிஸ்துவின் உன்னதப் பணியில் இணைந்து ஜெபிப்பதும், உழைப்பதும், கொடுப்பதும் தாங்குவதும் எங்கள் மேல் விழுந்த கடமையாகவும், பாக்கியமாகவும் கருதுகிறோம். தேவன்தாமே உதவி செய்வாராக. **பேராயர் தேவதாஸ்** அவர்கள் குடும்பத்தாருக்கும் அங்குள்ள ஊழியர்களுக்கும், எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**ஷாலோம் அலுவலக ஊழியர்கள்**
**சகோ. சாமுவேல், சகோ. தங்கதுரை,**
**சகோ. ஸ்டீபன், சகோதரி. நித்யா, சகோ. பிரவீன்**

## ஷாலோம் ஜெபக்குழு

**பிரியமானவர்களே,** கர்த்தருடைய பெரிதான கிருபையினால் நமது ஷாலோம் ஊழியங்களுக்காக ஜெபிக்கும் அநேக ஜெபக் குழுக்களை தேவன் தந்துள்ளார். இந்த ஜெபக்குழுக்கள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றமைக்காக தேவனைத் துதிக்கிறோம்.

இதை வாசிக்கின்ற உங்களையும் மாதம் ஒரு முறை கூடி **ஷாலோம் ஊழியங்களுக்காகவும் இந்திய தேசத்திற்காகவும்** ஜெபிக்கும்படியாக தேவன் ஏவுவாராகில் உங்கள் பகுதியில் ஒரு ஜெபக்குழுவை ஆரம்பித்து ஜெபிக்க அன்பாய் கேட்கிறோம். மேலும் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள் உங்களுக்கு ஜெபக்குறிப்புகளை அனுப்பி வைக்கிறோம். தேவன்தாமே ஜெபத்தின் மூலம் உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக! தொடர்புக்கு : 9698044522, 0461 – 2375468, 2377737

## ஷாலோம் பெண் ஊழியர்களுக்கான சிறப்புக் கூடுகை



தேவனுடைய பெரிதான கிருபையால் 2015ம் வருடம் பெப்ரவரியில் 12, 14, 17, 19 ஆகிய தினங்களில் குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் 1, இராஜஸ்தான் 2 ஆகிய பகுதிகளில் உள்ள ஊழியக்கார பெண்களுக்கென்று சிறப்புக் கூட்டங்கள் தாகோத் (2) சொகன்யா, கோய்கா என்ற இடங்களில் நடைபெற்றது. இந்தக் கூட்டங்களை **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் பொறுப்பேற்று நடத்தினார்கள். இந்தக் கூட்டத்தில் சுமார் 500 பெண் ஊழியர்கள் பங்கு பெற்று தேவாசீர்வாதம் பெற்றார்கள்.

**சகோதரி. வஹிதா, சகோ. பிராங்கிளின்** மற்றும் இளம் சகோதரிகள் இணைந்து சுமார் 1 மணி நேரம் ஆராதனை நடத்தினார்கள். ஆராதனையிலேயே அனைவரும் அபிஷேகத்தில் நிரம்பி தேவனை மகிமைப்படுத்தினார்கள். ஆவியில் உற்சாகமடைந்தார்கள்.

தொடர்ந்து விசேஷ ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டது. அதில் 1 கோடி பீல் மக்களின் இரட்சிப்புக்காக, அடுத்த தலைமுறையான சிறுவர்களின் ஆசீர்வாதத்திற்காக, தேசத்திற்காக, தேசத் தலைவர்களுக்காக, தேசத்தின் சமாதானத்திற்காக, பெண் ஊழியர்கள் பாரத்தோடு ஜெபித்தார்கள். தொடர்ந்து நடைபெற்ற சாட்சி வேளையில் கர்த்தர் பெண்கள் ஊழியத்தில் செய்த அற்புதங்களை சாட்சியாக பகிர்ந்தார்கள். தேவ நாமம் மகிமைப்பட்டது. பின்பு கடந்த வருடம் அவர்களுடைய பகுதிகளில் மாதந்தோறும் நடைபெற்று வந்த கூட்டத்தில் தவறாமல் 12 மாதமும் பங்கு பெற்றவர்களுக்கு சிறப்பு பரிசு வழங்கப்பட்டது.

பின்பு சகோதரி வஹிதா அவர்கள் **"கர்த்தரிலும், அவருடைய வல்லமையிலும் பலப்படுங்கள்"** என்ற வார்த்தையிலிருந்து தேவ செய்தியை அளித்தார்கள். வசனத்தின் மூலம் யாவரும் தொடப்பட்டு தேவனுடைய வல்லமையில் அதிகமாய் நிரப்பப்பட்டார்கள். மறுபடியும் ஒருமுறை தங்கள் வாழ்க்கையை தேவனுக்காக வல்லமையோடு ஊழியம் செய்ய தங்களை கண்ணீரோடு அர்ப்பணித்தார்கள்.

---

## ஷாலோம் ஆதரவாளர்களுக்கு ஓர் அறிவிப்பு

அன்புள்ள ஷாலோம் ஆதரவாளர்களுக்கு, இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்! குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் ஆகிய 3 மாநிலங்களில் வாழும் பீல் ஆதிவாசி சிறுவர்களுக்கு உணவு, உடை, உறைவிடத்துடன் கல்வி மற்றும் உயர்கல்வியினை அளித்து அவர்கள் சமுதாயத்தில் முன்னேறப் பாடுபடுவதோடு, பீல் ஆதிவாசி ஜனங்களுக்கு இலவச மருத்துவச் சேவை மற்றும் இதர சமுதாய முன்னேற்றப் பணிகளை நிறைவேற்றிவரும் **Shalom Charity Mission** க்கு அரசாங்கத்திடமிருந்து **"வருமான வரிவிலக்குச் சான்று"** ***(80G)*** 17.07.2013 முதல் கிடைக்கப் பெற்றுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம்.

சமுதாய முன்னேற்றப் பணி, பீல் ஆதிவாசி சிறுவர் முன்னேற்றப்பணி, மற்றும் மருத்துவ பணிக்குக் காணிக்கை அனுப்பும் ஆதரவாளர்கள் இந்த வருமான வரிவிலக்கினை கேட்டுப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

## இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரம் - அகமதாபாத் கூட்டங்கள்

தேவ கிருபையால் குஜராத் – அகமதாபாத்தில் இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரம் ஊழியங்கள் மிகவும் சிறப்பாய் நடைபெற்று வருகிறது. ஆயிரக்கணக்கானோர் ஜெபகோபுர ஊழியத்தின் மூலம் கண்ணீர் துடைக்கப்பட்டு, ஆசீர்வதிக்கப்பட்டு வருகிறார்கள். கடந்த மாதம் பிப்ரவரி 7,8 ஆகிய தேதிகளில் விசேஷ கூட்டங்கள் நடைபெற்றது. அதில் சுமார் 250 பேர் பங்குபெற்றார்கள். இதில் 7–ஆம் தேதி சனிக்கிழமை அன்று சுகமளிக்கும் கூட்டத்தில், **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் சிறப்பு செய்தி வழங்கி, ஜெபித்தார்கள். ஜெப வேளையில் தேவ வல்லமை இறங்கி மக்களை ஆட்கொண்டது. பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றார்கள். கூட்டம் முடிந்தபின்பு தனித்தனியாக ஜெபம் ஏறெடுக்கப்பட்டது.

அடுத்தநாளும் பிப்ரவரி 8ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 5 மணியிலிருந்து 10 மணி வரை விசேஷ குடும்ப ஆசீர்வாதக் கூட்டம் நடைபெற்றது. அதில் **பிஷப். தேவதாஸ்** அவர்கள் விசேஷ ஆசீர்வாத செய்தியை அளித்தார்கள். ஆபிரகாமின் மூலம் ஆசீர்வாதம் இயேசுவின் மூலமாக நமக்கு கிடைக்கப் பெற்றதை பற்றியும், நமக்குள் பூமியிலுள்ள ஜாதிகள் ஆசீர்வதிக்கப்படும் என்பதை பற்றியும் செய்தி அளித்தார்கள். வார்த்தை தேவ மக்களை ஊடுருவி பாய்ந்தது. தங்களை அழுது, ஒப்புக்கொடுத்து, தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றார்கள். தேவ நாமம் மகிமைப்படுவதாக !

## கீரின் சிட்டி ஆலய ஞாயிறு ஆராதனை, காந்தி நகர், குஜராத்

பிப்ரவரி 8–ஆம் தேதி ஞாயிற்றுகிழமை அன்று காந்திநகரில் உள்ள கீரின் சிட்டி ஆலயத்தில் **பிஷப். தேவதாஸ்** அவர்கள் குடும்பமாய் கலந்துக் கொண்டு சிறப்பு செய்தி வழங்கினார்கள். **Pr. G. சாம் ஜாஸ்வா** அவர்கள் மிகவும் அன்போடு வரவேற்பு கொடுத்தார்கள். ஆராதனைக்கு பின்பு மக்கள் தனியாக சந்தித்து ஜெபித்தார்கள். தேவனுக்கே மகிமை !

## பணித்தளத்தில் நடைபெறும் 40 நாள் உபவாச ஜெபம்

ஷாலோம் திருமண்டலத்தின் அனைத்து திருச்சபைகளிலும் லெந்து நாட்களில் 40 நாள் உபவாச ஜெபம் நடைபெற்று வருகிறது. இதில் அந்தந்த சபையின் ஊழியர்கள், விசுவாசிகள், மூப்பர்கள் யாவரும் ஆர்வமாய் ஆசரித்து வருகிறார்கள். அநேக சபைகளில் 40 நாட்களும் காலை முதல் மாலை வரை விசுவாசி குடும்பங்கள் முறையே அனுதினமும் ஆலயத்தில் குடும்பமாய் வந்து ஜெபிக்கிறார்கள். இந்த 40 நாட்களில் ஜெபிக்கும்படியாக விசேஷ ஜெபக்குறிப்புகள் கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்றும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் விசேஷ உபவாசக் கூடுகை அனைத்து ஷாலோம் சபைகளிலும் நடத்தப்பட்டு வருகிறது. மேலும் Project ஊழியர்கள் 80 பேர்களுக்கு தாகோத் Training Centre -ல் வைத்து 24.02.2015 அன்று விசேஷ உபவாச ஜெபக்கூடுகை நடைபெற்றது. இதை **பேராயர். தேவதாஸ்** அவர்கள் பொறுப்பேற்று நடத்தினார்கள். கலந்துக் கொண்ட அனைவரும் மிகுந்த கண்ணீரோடு ஜெபித்தார்கள். கூடுகை ஆசீர்வாதமாக இருந்தது.

# ஷாலோம் பிஜல்பூர் மாணவர்களுக்கு ஒரு நாள் சிறப்பு கூடுகை

தேவனுடைய அநாதி தீர்மானத்தின்படி இராஜஸ்தானிலுள்ள பிஜல்பூரில் நமது ஷாலோம் மிஷன் பள்ளி நடைபெற்று வருகிறது. இதில் படிக்கும் சுமார் 350–பிள்ளைகளுக்கு பிப்ரவரி 26–ஆம் தேதியன்று ஒருநாள் ஆவிக்குரிய கூட்டம் நடத்தப்பட்டது. இதில் Training Unit ஊழியர்களும், அலுவலக ஊழியர்களும் சேர்ந்து **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் தலைமையில் நடத்தப்பட்டது. இதில் பாடல், ஆராதனை மற்றும் Action Songs பகுதியை **சகோ. ஃப்ராங்கிளின்** அவர்கள் நடத்தினார்கள்.


இராஜஸ்தான் மாநிலத்திலுள்ள நமது பள்ளியில் பயிலும் சிறுபிள்ளைகளுக்கென்று விசேஷித்த ஜெபத்தை **சகோ. கேரட்** அவர்கள் ஏறெடுத்தார்கள். தொடர்ந்து Training Unit ஊழியர்கள் பிள்ளைகளுக்கென்று கதைகளைச் சொல்லிக் கொடுத்தார்கள். மேலும் வேதாகம வினா–விடை போட்டி வகுப்பு வாரியாக நடத்தப்பட்டது. சரியான பதிலைச் சொன்ன மாணவர்களுக்கு சிறப்பு பரிசுகள் வழங்கப்பட்டது. மட்டுமல்லாமல் அரையாண்டு பரீட்சையில் முதல் மூன்று இடங்களில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு வகுப்பு வாரியாக சிறப்பு பரிசுகள் வழங்கப்பட்டது

விசேஷமாக MCC பள்ளி, சென்னை மூலம் நமது ஷாலோம் பள்ளி மாணவர்களுக்கென்று அனுப்பப்பட்ட பொருட்களை (School Bags, T.Shirts, Tiffin Bags, Umbrellas, Pouches, Pencil Box, Pen, Eraser, Sharpner, Bathing Soap, Powder, Paste, Brush, Detergent Powder & Soap, Towel, Shampoo, Bed Sheet, etc...) அனைத்து மாணவ மாணவியருக்கு வழங்கப்பட்டது. மிகுந்த சந்தோஷத்துடனும், நன்றியுடனும் அவற்றை பெற்றுக்கொண்டார்கள். இந்த பொருட்களை மனமுவந்து அளித்த பள்ளி தலைமை ஆசிரியைக்காகவும், ஆசிரியர்களுக்காகவும், மாணவர்களுக்காகவும், ஷாலோம் பள்ளியின் தலைமை ஆசிரியர் **திரு. நாத்து டின்டோர்** அவர்கள் ஜெபித்தார்கள். மற்றும் MCC பள்ளி மூலமாய் அளிக்கப்பட்ட அரிசி, பருப்பு இவற்றைப் பயன்படுத்தி அந்த நாளில் கலந்துக் கொண்ட மாணவர்களுக்கு விசேஷித்த உணவு வழங்கப்பட்டது. இவற்றை மனமுவந்து கொடுத்தவர்களுக்காக நாங்களும் தேவனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்தி நன்றி கூறுகிறோம். அல்லேலூயா!



*மாபெரும் மிஷனெரி வீரன்*

# டேவிட் பிரெய்னார்ட்



டேவிட் பிரெய்னார்ட் 1718 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20 ஆம் தேதி அமெரிக்காவில் பிறந்தார். சிறுவயதிலேயே மிகவும் பெலவீனன். மெலிந்த மேனியுடன் பரிதாபமாக காட்சி அளித்தார். அவரது 9 வது வயதில் தன் தகப்பனாரையும் 14 வது வயதில் தன் தாயாரையும் இழந்தான். சிறுவயதிலேயே அனாதையாய் விடப்பட்டார். சிறுவயது முதல் வேதத்தை வாசித்து தியானிப்பதிலும் ஜெபம் செய்வதிலும் ஆர்வம் கொண்டிருந்தார். ஆனால் உண்மையான மனந்திரும்பின வாழ்வு இல்லை. ஒருநாள் தேவ கோபாக்கினை தன்மேல் இருப்பதாக உணர்ந்தார். மன நிம்மதியை இழந்து தவித்தார். தமது 21 வயது வயதில் பிரெய்னார்ட் இயேசு கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு மறு பிறப்பின் அனுபவத்தோடு மகிழ்வுடன் வாழ்ந்தார்.

ஏல் கல்லூரியில் தன் படிப்பை தொடர்ந்தார். கல்லூரியில் சிறந்த மாணவன் என்ற பெயரைப் பெற்றார். கடினமான படிப்பினால் அவர் திடீரென்று காசநோயினால் தாக்கப்பட்டு மிகவும் அவதியுற்றார். அந்த வேளையிலும் தேவனோடு ஜெபத்தில் செலவழிப்பதை அதிகமாக விரும்பினார். கல்லூரியில் 3வது ஆண்டு படிக்கும் போது கல்லூரிப்படிப்பை முடித்து வெளியேற வேண்டிய எதிர்பாராத சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. ஆனாலும் அந்தகாரத்தில் இருக்கும் மக்களைக் குறித்த பாரம் அவரை அழுத்தியது. குறிப்பாக சிகப்பு இந்தியர் அல்லது அமெரிக்க இந்தியர்களாகிய ஆதி இன மக்கள் மீது அதிக பாரம் கொண்டார். மேலும் நியூயார்க் போதகர் ஒருவர் பிரெய்னார்ட்க்கு கடிதம் எழுதினார் அதில் அவரை அமெரிக்க இந்தியர்களிடம் மிஷனெரியாக உன்னை அனுப்ப விரும்புகிறோம் என்று உடனே மிஷனெரியாக செல்ல விரும்பிய பிரெய்னார்ட் முழு பெலத்தோடு காணப்படவில்லை. அமெரிக்க இந்தியர்களிடம் மிஷனெரியாக பணியாற்ற அடர்ந்த காடுகளையும் ஆபத்தான காட்டாறுகளையும் நீரோடைகளையும் கடந்து செல்ல வேண்டும். பெலவீனரான பிரெய்ன்ார்ட்க்கு ஆண்டவர் நல்ல பெலத்தையும் மன தைரியத்தையும் கொடுத்திருந்தார். தனது 25 வது வயதில் அடர்ந்த காடுகள் மத்தியில் தனியாக சென்று நாகரீகமற்ற இந்திய மக்களுக்கு கிறிஸ்துவை அறிவிக்க முன் வந்தார். பலதடைகளை கடந்து இந்தியர்களின் இருப்பிடம் வந்து சேர்ந்தார்.

ஒரு நாள் இரவு அவர் தன் குதிரையில் மலைப்பிரதேசத்தில் பயணம் மேற்கொண்டார். மலைகளுக்கு கீழே மிக ஆழமான ஆறுகள் பாய்ந்து கொண்டிருந்தன திடீரென்று அவர் சவாரி செய்த குதிரையின் கால் பாறையின் இடுக்கில் சிக்கிக்கொண்டது. அதனால் குதிரை வலிதாங்க முடியாமல் துடித்தது. பிரெய்ன்ார்ட் தூக்கி எறியப்பட்டு தரையிலே விழுந்தார். தெய்வாதினமாக கீழே புரண்டு ஓடும் ஆற்றில் விழாமல் தப்பினார். ஜெபித்துக் கொண்டே இந்த எல்லா தடைகளையும் கடந்து ஆத்மபாரத்தில் நிறைந்தவராய் எல்லா இன்னல்களையும் இடுக்கண்களையும் முழுமனதோடு ஏற்றுக்கொண்டார்.

பிரெய்ன்ார்ட் ஊழியம் செய்ய தெரிந்து கொண்ட சிகப்பு இந்தியர்கள், அநாகரீகமான ஆதிவாசிகள், மூடநம்பிக்கைகளால் கட்டுண்டவர்கள், பறவைகள், மிருகங்கள், மரங்களை வணங்குபவர்கள் அவர்களுக்கு கிறிஸ்துவே பூரண வல்லமையுடையவர் என்று அறிவித்தார். ஒருநாள் முதிய பூசாரி ஒருவர் தோல் உடை உடுத்தி இலைகளால் தன்னை அலங்கரித்து கொண்டு வந்தார். அவர் **"என்னுடைய மக்களை அவர்களின் பூர்வீக மதத்தையே பின்பற்ற வேண்டும் என்று கட்டாயப்படுத்துவேன்"** என்று சவாலிட்டுச் சொன்னார்.

அவருக்கு பிரெய்னார்ட் இயேசுவைக் குறித்தும் அவரது சிலுவை மரணம் குறித்தும் அவனிடம் எடுத்துரைத்தார். அதைக்கேடடு மனந்திரும்பினார். **"என்னென்ன உபத்திரவங்களைக் கடந்து வந்தேன் என்பதல்ல கிறிஸ்துவுக்கென்று எவ்வளவு ஆத்துமாக்களைஆதாயம் பண்ணினேன் என்பதே பிரதானம்"** என்று பிரெய்ன்ார்ட் அடிக்கடி கூறுவார். அவர் தனது கடின உழைப்பால் தன் சுகத்தை இழந்து அதிக பெலவீனம் அடைந்தார் இந்தியர்களை நேசித்தபடியால் எந்த பெலவீனத்தையும் சுகவீனத்தையும் தாங்கிக்கொண்டார்.

இரவு பகலாக அயராது உழைத்ததின் பலன் கிடைக்கலாயிற்று. ஆவியானவர் இந்தியர்கள் மேல் அசைவாடினார். சுவிசேஷத்தை எதிர்த்த அனைவரும் பாவ உணர்வு பெற்று மனம் மாறி கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளலாயினர். ஒருநாள் பிரெய்னார்ட் நடத்தும் அற்புத கூட்டத்தை வேடிக்கை பார்க்கும்படியாக ஒரு இளம்பெண் வந்தாள். அவளிடம் தூய வாழ்வு வாழ்வதைக் குறித்து பிரெய்னார்ட் பேசினார். அவளோ கேலியாக சிரித்து அவரை பரிகாசம் செய்தாள். ஆனால் பிரெய்னார்ட் கூறிய நற்செய்தி அவள் உள்ளத்தில் பாவ உணர்வை ஏற்படுத்த அவள் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு சரணடைந்தாள். சிவப்பு இந்திய இனமக்கள் பிரெய்ன்ார்ட் பிரசங்கத்தை கவனமாய் கேட்டனர். **"கடவுளுடைய புத்தகத்தையுடைய வெள்ளைப் பிரசங்கியார்"**. என்று பிரெய்னார்ட் எல்லாராலும் அழைக்கப்பட்டார். சிவப்பு இந்தியரை பிரெய்னார்ட் அதிகமாய் நேசித்து அன்பு கூர்ந்தார். கடைசி மூச்சு வரை அவர்களுக்கு இயேசுவைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தார். இறுதியாக **"நிச்சயமாகவே கிறிஸ்து வரப்போகிறார். தாமதம் செய்யார். நானும் தேவ தூதரோடு சேர்ந்து என் தேவனைத் துதித்து மகிமைப்படுத்துவேன்"** என்று சொன்னார்.

தமது இளம் வயதிலேயே பலவீனமான பிரெய்னார்ட் இரவு பகலாக உண்ணாமல் உறங்காமல் இயேசுவின் சுவிசேஷத்தை சிவப்பு இந்தியர்களுக்கு அறிவித்து தமது 29 வது வயதில் கிறிஸ்துவுக்குள் நித்திரை அடைந்தார். இவரது வாழ்க்கையே வில்லியம்கேரி, ஹென்றி மார்ட்டின் போன்ற தலைசிறந்த மிஷனெரிகளை அருள்பணிக்கு அர்ப்பணிக்க தூண்டியது என்பது தான் உண்மை. இயேசுவின் நாமம் என்றும் வாழ்க!

---

**''அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்; ஆவியிலே அனலாயிருங்கள்; கர்த்தருக்கு ஊழியஞ்செய்யுங்கள்'' -ரோமர் 12 : 11**

---

# பணித்தளத்தில் தேவன் செய்த அற்புதங்களுக்காக தேவனைத் துதியுங்கள்!

## குஜராத் மாநிலம்

**Pr. விசியா மாவி குந்திகேடா**

ராம்ஜி என்ற சகோதரன் அசுத்த ஆவியினால் மிகவும் கஷ்டப்பட்டு வந்தார். இவருக்காக பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் அசுத்த ஆவியின் பிடியிலிருந்து அற்புத விடுதலை கொடுத்து ஆசீர்வதித்தார்.

பவுல் என்ற சகோதரனின் மகன் காய்ச்சலினால் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தான். இவனுக்காக பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் அற்புத சுகமளித்தார்.

**Pr. ரத்தன்சிங் பர்மார் கலசியா**

ஹக்குபேன் என்ற சகோதரி பக்கவாத வியாதியினால் பாதிக்கப்பட்டார். இவருக்காக ஜெபித்தபோது இயேசு கிறிஸ்து பக்கவாத வியாதியிலிருந்து அற்புத சுகத்தைக் கொடுத்தார்.

**Pr. வீர்சிங் பாரியா தார்மி**

ராகேஷ் என்ற சகோதரனின் குடும்பம் சமாதானமில்லாமல் இருந்தது. இவருக்கு இயேசுவின் அன்பை எடுத்துக் கூறி இவருக்காக ஜெபித்தபோது தேவன் இவரது குடும்பத்தில் சமாதானத்தைக் கட்டளையிட்டார்.

**Pr. மன்னு மெய்டா நெல்சர்**

தினேஷ் பாய் என்ற சகோதரன் அசுத்த ஆவியின் பிடியினாலும், டி.பி. வியாதியினாலும் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தார். இவருக்காக ஜெபித்தபோது தேவன் அசுத்த ஆவியை விரட்டி, டி.பி. நோயிலிருந்து சுகத்தைக் கொடுத்தார்.

**Pr. மடியா சங்காடா தாஸ்லா**

சோனா என்ற சகோதரி சுவாசிக்க முடியாமல் வேதனைப்பட்டார். இவருக்காக ஜெபித்தபோது தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்தார்.

**Pr. தார்சிங் வாக்லே முன்கோசலா**

சோனல் என்ற சகோதரி 4 வருடமாக அசுத்த ஆவியினால் பாதிக்கப்பட்டிருந்தார். இவரை ஷாலோம் சபைக்கு ஜெபிக்கும்படியாக அழைத்து வந்திருந்தார்கள். இவருக்காக ஜெபித்தபோது தேவன் பிசாசின் பிடியிலிருந்து விடுதலைக் கொடுத்தார்.

முனி என்ற சகோதரி ஒரு மாதமாக மூளையில் பாதிப்பு ஏற்பட்டு வேதனைப்பட்டார். இவருக்காக ஜெபித்தபோது தேவன் மூளையிலிருந்த பாதிப்பை நீக்கி அற்புத சுகத்தைக் கொடுத்தார்.

**Pr. கன்னு பாபோர் மால்வாசி**

மான்ஜிபாய் என்ற சகோதரனின் மகனுடைய கையினால் எந்த வேலையும் செய்ய முடியாமல் மிகவும் வேதனைப்பட்டு வந்தார். இவருக்காக ஜெபித்தபோது தேவன் கை செயல்படும்படியாக சுகத்தைக் கொடுத்தார்.

**Pr. வார்சிங் பர்மார் சிமளியா**

மன்னுபாய் என்ற சகோதரன் சுவாசிக்க முடியாமல் கஷ்டப்பட்டார். எவ்வளவோ பணம் செலவழித்தும் பலனில்லை. இவருக்காக ஜெபித்தபோது இயேசு அற்புத சுகத்தைக் கொடுத்து ஆசீர்வதித்தார்.

**Pr. மகன் சிலாட் பாம்பேலா**

லீலா என்ற சகோதரி 2 ஆண்டுகளாக அசுத்த ஆவியின் பிடியினில் சிக்கி மிகவும் பாதிக்கப்பட்டிருந்தார். இவரை ஷாலோம் சபைக்கு ஜெபிக்கும்படியாக அழைத்து வந்தார்கள். இவருக்காக ஜெபித்தபோது தேவன் அசுத்த ஆவியின் பிடியிலிருந்து அற்புத விடுதலைக் கொடுத்தார்.

# பணித்தளத்தில் தேவன் செய்த அற்புதங்களுக்காக தேவனைத் துதியுங்கள்!

## இராஜஸ்தான் மாநிலம்

**Pr. வீரேந்திர டாமோர் — சஜேலி**

லக்குபேன் என்ற சகோதரி டைபாய்டு காய்ச்சலினால் மிகவும் வேதனைப்பட்டார். இவரை ஷாலோம் சபைக்கு, ஜெபிக்கும்படியாக அழைத்து வந்தார்கள். இவருக்காக பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் வியாதியை நீக்கி சுகத்தைக் கொடுத்தார்.

**Pr. ரமேஷ் கனவா — கேட்பூர்**

மங்களபாய் என்ற சகோதரன் அசுத்த ஆவியினால் மிகவும் வேதனைப்பட்டார். இவருக்காக பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் அற்புத விடுதலையைக் கொடுத்தார்.

லலிதா என்ற சிறுமி நடக்கமுடியாமல் மிகவும் வேதனைப்பட்டார். இவருக்காக பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் அற்புதமாக சிறுமியை நடக்க வைத்தார்.

**Pr. சுரேஷ் டாமோர் — ஆம்ளிபாடா**

ஒரு சகோதரனின் வயிற்றில் இருந்த கட்டியினால் மிகவும் வேதனையுடன் வாழ்ந்து வந்தார். ஜெபிக்கும்படியாக ஆலயத்திற்கு வந்தபோது இவருக்காக ஜெபித்தோம். தேவன் ஜெபத்தைக் கேட்டு அற்புதமாக கட்டியை மறையச் செய்தார்.

**Pr. தினேஷ் சந்தி பார்கி — தெப்ரி கல்லு**

கர்மாபாய் என்ற சகோதரனின் மகள் காது கேட்காமல் மிகவும் கஷ்டப்பட்டாள். இவருக்காக பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் அற்புதமாக காதை கேட்கும்படியாகச் செய்தார்.

**Pr. லால்சிங் கராசியா — குண்டா பேடல்**

மகன்பாய் என்ற சகோதரன் குஷ்டரோக வியாதியினால் மிகவும் கஷ்டப்பட்டார். மருத்துவம் மற்றும் மந்திரம் செய்தும் எந்த பலனுமில்லை. இறுதியாக ஜெபித்தபோது தேவன் அற்புதமாக குஷ்டரோகத்தை நீக்கினார்.

**Pr. தல்லு கராசியா — சரக்கானி**

ராகேஷ் என்ற சகோதரன் மனநிலை சரியில்லாதவராய் அலைந்து திரிந்து கொண்டிருந்தார். இவரை ஜெபிக்கும்படியாக ஷாலோம் சபைக்கு அழைத்து வந்தனர். இவருக்காக ஜெபித்தபோது தேவன் அற்புதமாக தெளிந்த மனநிலையைக் கொடுத்து ஆசீர்வதித்தார்.

**Pr. பிம் சந்த் கட்டாரா — பாண்டாரியா**

சகுராபேன் என்ற சகோதரி 2 மாதமாக கையிலுள்ள கட்டியினால் மிகுந்த வேதனையை அனுபவித்து வந்தார். இவருக்காக ஜெபித்தபோது தேவன் கட்டியை நீங்கி சுகத்தைக் கொடுத்தார்.

**Pr. பிரபுலால் பாபோர் — தன்புரி**

விகாஷ்பாய் என்ற சகோதரன் 2 மாதமாக மஞ்சள் காமாலை நோயினால் கஷ்டப்பட்டு வந்தார். எவ்வளவோ மருத்துவம் பார்த்தும் மருந்துகள் சாப்பிட்டும் நோய் குணமாகவில்லை. இறுதியாக ஜெபத்தின் மூலம் தேவன் சுகத்தைக் கொடுத்தார்.

**Pr. ஹர்திங் மெய்டா — பார்த்தியா**

ரமேஷ் என்ற சகோதரன் அசுத்த ஆவியின் பிடியினால் பாதிக்கப்பட்டிருந்தார். இவருக்காக பாரத்தோடு ஜெபித்தபோது, தேவன் ஜெபத்தைக் கேட்டு அற்புதமாக பிசாசின் பிடியிலிருந்து விடுதலைக் கொடுத்தார்.

**Pr. பார்த்தா புரியா — வால்ரா**

புன்னிபேன் என்ற சகோதரியின் வயிற்றில் கட்டி இருந்து அதிகமாய் வேதனைப்பட்டார். இவரை ஷாலோம் சபைக்கு அழைத்து வந்தார்கள். இவருக்காக ஜெபித்தபோது தேவன் கட்டியை நீக்கி சுகம் கொடுத்தார்.

## பணித்தளத்தில் தேவன் செய்த அற்புதங்களுக்காக தேவனைத் துதியுங்கள்!

### மத்தியப்பிரதேசம் மாநிலம்

**Pr. யாகூப் பார்கி — செமல்பாடா**

ஒரு சகோதரன் 3 ஆண்டுகளாக மனநிலை சரியில்லாமல் அலைந்து திரிந்து வந்தான். இவனுக்காக ஜெபித்தபோது தேவன் மனநிலையை மாற்றி சுகத்தைக் கொடுத்தார்.

**Pr. வால்சிங் சகோரியா — குளியா**

ஒரு சகோதரிக்கு கண் பார்வை சரியாக தெரியாமல் இருந்தது. இவருக்காக பாரத்தோடு ஜெபித்தபோது, தேவன் நல்ல கண் பார்வையைக் கொடுத்தார்.

அம்ரு என்ற சகோதரனின் 5 வயது மகன் தண்ணீரில் விழுந்து சுயநினைவு இல்லாமல் இருந்தான். இவனுக்காக பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் அற்புதமாக அந்த சிறுவனைக் காப்பாற்றினார்.

**Pr. துர்கேஷ் பாபோர் — மால்பாடா**

சந்தோஷ் என்ற சகோதரன் மரத்திலிருந்து கீழே விழுந்ததால் அவர் கை உடைந்து விட்டது. இவருக்காக ஜெபித்தபோது தேவன் நல்ல சுகத்தைக் கொடுத்தார்.

**Pr. ரமேஷ் வாசுனியா — சொக்குவாடா தாலா**

கருணா என்ற சகோதரி மஞ்சள் காமாலை நோயினால் மிகவும் வேதனைப்பட்டார். இவருக்காக பாரத்தோடு ஜெபித்தபோது இயேசு அற்புத சுகம் கொடுத்தார்.

**Pr. மக்கன்சிங் புரியா — தெமேரா**

சுக்கியாபாய் என்ற சகோதரர் குடிப்பழக்கத்திற்கு அடிமையாக இருந்தார். இவருக்காக கண்ணீரோடு ஜெபித்தபோது தேவன் குடிப்பழக்கத்தை மாற்றி ஆசீர்வதித்தார். தற்போது இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டுள்ளார்.

**Pr. ஜோயல் பாரியா — வேதபுரி**

கேம்சந்த் புரியா என்ற சகோதரன் அசுத்த ஆவியினால் பாதிக்கப்பட்டிருந்தார் இவருக்காக பாரத்தோடு ஜெபித்தபோது, தேவன் அசுத்த ஆவியின் பிடியிலிருந்து விடுதலைக் கொடுத்தார்

அகல்யாபாய் என்ற சகோதரனை பாம்பு கடித்துவிட்டது. இவருக்காக ஜெபித்தபோது விஷம் ஏறாமல் தேவன் பாதுகாத்தார்.

**Pr. திலீப்சிங் வாசுனியா — ஜாமுகேடா**

ஜித்தேந்திரபாய் என்ற சகோதரன் 8 ஆண்டுகளாக அசுத்த ஆவியின் பிடியில் பாதிக்கப்பட்டிருந்தார். இவருக்காக பாரத்தோடு ஜெபித்தபோது இயேசு அற்புத விடுதலையைக் கொடுத்தார்.

பல்லுபாய் என்ற சகோதரன் 9 வருடமாக குடிப் பழக்கத்திற்கு அடிமையாக இருந்தார். இவருக்காக பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் அற்புதமாக குடிப்பழக்கத்தை மாற்றினார்.

**Pr. ராலுசிங் ஹத்திலா — திக்கிடி**

கேத்துபேன் என்ற சகோதரியின் ஒரு கால் உடைந்துவிட்டது. மருத்துவமனைக்குச் சென்றும் சரியாகாமல் இருந்தது. இவருக்காக தொடர்ந்து ஜெபித்தபோது தேவன் நல்ல சுகத்தைக் கொடுத்தார்.

**Pr. நவலேஷ் தாவர் — பிப்லாயா**

தேன்சிங்பாய் என்ற சகோதரன் பக்கவாத வியாதியினால் மிகவும் வேதனைப்பட்டு வந்தார். இவருக்காக பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் பக்கவாத நோயை குணமாக்கி அற்புத சுகத்தைக் கொடுத்தார்.



# ஷாலோம் - வேத வினாப் போட்டி 22

**பதில் எழுதுக :**

1. யாருடைய வாய் அடைக்கப்படும்?
2. எது கண்களுக்குப் பிரியம்?
3. “நீ என் பார்வைக்கு அருமையான– படியினால் கனம் பெற்றாய்”– வாசிப்பது எங்கே?
4. இரட்சிப்பு யாருடையது?
5. செப்பனியாவின் தகப்பன் யார்?
6. தேவனுடைய ஆழங்களையும் ஆராய்ந்தறிகிறவர் யார்?
7. கர்த்தருடைய பாதத்தூள் எவை?
8. எது ஜீவனும் வல்லமையும் உள்ளது?
9. எது நீதியின் விளைவோடிருக்கும்?
10. தம்முடைய பகைஞருக்காக கோபத்தை வைத்து வைக்கிறவர் யார்?

**வேதவினாப் போட்டியில் பங்கு பெறும் வாசகர்களுக்கான நிபந்தனைகள் :**

1. விடைகள் யாவும் தகுந்த வேத ஆதாரத்துடன் இருக்க வேண்டும்.
2. கேள்வி எண்ணைக் குறிப்பிட்டு பதில்களை மட்டும் எழுதினால் போதும்.
3. பரிசு பெறுபவர் ஒன்றுக்கு மேற்பட்டவராக இருப்பின் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்படுவர்.
4. விடைகளை எழுதும் போது தவறாமல் உங்கள் விலாசம், போன் நம்பர் போன்றவற்றையும் சேர்த்து எழுதவும்.
5. பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : **17.04.2015**

**கடந்த மார்ச் மாத வேத வினா போட்டி எண் 21க்கான சரியான விடைகள் :**

1. நோவா. – ஆதி. 9 : 20
2. ஏசாயா 54 : 8
3. அன்பு – 1 பேதுரு 4 : 8
4. கூசா – லூக்கா 8 : 3
5. கொடுப்பேன் என்று சொல்லியும் கொடாமலிருக்கிற வஞ்சகன்.–நீதி. 25:14
6. வட காற்று – நீதி. 25 : 23
7. பர்னபா – அப். 4 : 36
8. சுறு சுறுப்புள்ளவன் – நீதி. 10 : 4
9. ஏகூத் – நியா. 3 : 15
10. லிவியாதான் – யோபு 41 : 31

**கடந்த மார்ச் மாத வேத வினாப் போட்டி எண் 21 இல் சரியான விடையினைத் தகுந்த நேரத்திற்குள் எழுதி அனுப்பிய 22 நபர்களில் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டு பரிசு பெற்றவர்கள்.**

**1. Sis.** பியூலா ஜெசுராஜன், புதுச்சேரி. **2. Bro.** ஜெசின் ஜுலியா, மார்த்தாண்டம். **3. Sis.** வயோலா மர்காஷிஸ், நாசரேத்.

**பதில்களை அனுப்ப வேண்டிய முகவரி**

**SHARING LOVE MISSION**
New No. 5A/323, Old.No. 5/168, Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.
Phone: 0461 - 2375468, Cell : 9345675468

# தேவனிடம் வேண்டிக் கொள்ளுங்கள்



**இந்திய தேசத்தின் ஆசீர்வாதத்திற்காக**

இந்திய தேசத்தை தேவன் ஆசீர்வதிக்கும்படியாகவும், தேசத்தில் பல இடங்களில் நடக்கும் வன்முறைகள் எல்லாம் மாறும்படியாகவும், குறிப்பாக கிறிஸ்தவர்களுக்கும், ஊழியங்களுக்கும் விரோதமாக எழும்பும் நிலைமை மாறி கர்த்தருடைய நாமம் மகிமைப்படும் படியாகவும் ஜெபியுங்கள்.

**ஊழியங்களுக்காகவும், ஊழியர்களுக்காகவும்**

தேசத்தில் உள்ள அனைத்து மிஷனரி ஊழியங்களுக்காகவும், சுவிசேஷ ஊழியங்களுக்காகவும், சபை ஊழியங்களுக்காகவும், போதகர் ஊழியங்களுக்காகவும், தீர்க்கதரிசன ஊழியங்களுக்காகவும் இந்த ஊழியங்களையும், ஊழியர்களையும் தேவன் பாதுகாத்து தம்முடைய நாம மகிமைக்காக வல்லமையாகப் பயன்படுத்தவும் ஜெபியுங்கள்.

**பீல் ஆதிவாசி மக்கள் இரட்சிப்பிற்காக**

கர்த்தர் தரிசனமாகக் கொடுத்த குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் மாநிலங்களில் உள்ள 1 கோடி பீல் ஆதிவாசி மக்களும் இயேசுவை அறிந்துக் கொண்டு அவரை ஏற்றுக் கொண்டு அங்குள்ள மந்திரவாதிகள், கொலைகாரர்கள், கொள்ளைக்காரர்கள், பலவிதமான பாவ, சாபங்களிலும் உள்ள மக்கள் இரட்சிக்கப்பட்டு இயேசுவை தன் சொந்த இரட்சகராக ஏற்று சாட்சியாக வாழவும் ஜெபியுங்கள்.

**சுதேச ஊழியர்கள்**

அபிஷேகம் பெற்ற 200 புதிய சுதேச ஊழியர்கள் இந்த ஆண்டு இறுதிக்குள் ஷாலோம் ஊழியத்தில் இணையவும் தேவன் அவர்களை வல்லமையாகப் பயன்படுத்தவும் ஜெபியுங்கள்.

**விஷ காய்ச்சல்**

நம் தேசத்தில் காணப்படுகின்ற விஷ காய்ச்சல் மற்றும் பலவிதமான நோய்கள் எல்லாம் மாறவும் மக்கள் நல்ல சுகத்தோடு தேவனை மகிமைப்படுத்தும் படியாகவும் ஜெபியுங்கள்.

**வடஇந்தியாவின் பாதுகாவலுக்காக**

வடஇந்தியாவில் உள்ள ஊழியங்களுக்காகவும், அங்குள்ள ஊழியர்களுக்காகவும் குறிப்பாக நம் கிறிஸ்தவர்களுக்கு விரோதமாய் எழும்பியுள்ள எதிர்ப்பாளர்களுக்காகவும், எந்த எதிர்ப்பு வந்தாலும் விசுவாசிகள் சோர்ந்து போகாமல் விசுவாசத்தில் முன்னேறவும், அதன் மூலம் கர்த்தருடைய நாமம் மகிமைப்படும்படியாகவும் ஜெபியுங்கள்.

**சாலை விபத்துக்கள்**

தற்போது அதிகமான சாலை விபத்துக்கள் ஏற்படுகிறது நம்முடைய ஊழியர்கள், விசுவாசிகள், சிறு குழந்தைகள், வாலிபர்கள் அனைவருக்கும் தேவன் தாமே முன்னின்று சாலை விபத்துக்களிலிருந்து நம்மை பாதுகாக்கும்படியாகவும் ஜெபியுங்கள்.

**தேர்வெழுதி முடிவுகளுக்காக காத்திருக்கும் மாணவ மாணவிகளுக்காக**

நம் ஷாலோம் ஊழியத்தின் மூலம் தாங்கப்பட்டு வரும் சிறுவர்கள் மற்றும் நம் சுதேச ஊழியர்களுடைய பிள்ளைகள் மற்றும் ஆதரவாளர்களின் பிள்ளைகள் 10ம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு தேர்வுகள் எழுதியுள்ளனர். இந்தப் பிள்ளைகளுக்கு தேவன் நல்ல மதிப்பெண்களைக் கொடுக்கவும், மேற்படிப்புகளுக்கு நல்ல வழி வாசல்களைத் திறந்து கொடுக்கவும், தாங்கள் விரும்பும் பள்ளி மற்றும் கல்லூரிகளில் இடம் கிடைக்கவும் ஜெபியுங்கள்.

**ஆலய கட்டுமான பணி**

பணித்தளங்களில் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்ட பீல் மக்கள் ஆராதிப்பதற்கு அநேக கிராமங்களில் ஆலயம் இல்லாமல் இருக்கிறார்கள். 2015ம் ஆண்டில் நம்முடைய பணித்தளத்தில் 100 ஆலயங்கள் கட்டப்பட வேண்டியுள்ளது. ஒரு ஆலய கட்டுமானப் பணிக்கு குறைந்தது ரூ. 2 இலட்சங்கள் தேவைப்படுகிறது. தேவைகள் சந்திக்கப்படவும், எதிர்ப்புகள் இல்லாமல் குறித்த நேரத்தில் ஆலயங்கள் கட்டி முடிக்கப்படவும் ஜெபியுங்கள்.

**மூப்பர்கள் கூடுகை**

2015ம் ஆண்டு மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் 25 இடங்களில் நடைபெற்று வரும் மூப்பர்கள் கூடுகைக்காகவும், இதில் கலந்து கொள்ளும் சுமார் 5000 மூப்பர்களுக்காகவும் கூடுகைகள் சிறப்பாக நடைபெறவும், தேவன் மூப்பர்களை வல்லமையாகப் பயன்படுத்தும்படியாகவும் ஜெபியுங்கள்.

**திருச்சபை ஒருங்கிணைப்பு**

வளர்ந்து வரும் ஷாலோம் ஊழியத்தில் 3 மாநிலங்களிலும் உள்ள சபைகள், விசுவாசிகள், ஊழியர்கள் பெருகியுள்ளார்கள் மூன்று மாநிலங்களும் மூன்று திருமண்டலமாக பிரிக்கப்பட்டு இதில் ஊழியம் செய்கிற குருவானவர்கள் அனைவருக்கும் ஒரு மனமாய் செயல்பட கர்த்தருக்கென்று உண்மையோடு செயல்பட ஜெபியுங்கள்.

**40 நாட்கள் உபவாச ஜெபம் & உயிர்த்தெழுந்த திருநாள் ஆராதனை**

இந்த லெந்து நாட்களில் பீல் விசுவாசிகள் அனைவரும் உபவாசம் இருந்து ஜெபிக்கவும், அவர்களை தேவன் பலப்படுத்தவும், இதன் மூலம் அவர்கள் ஜெபத்தைக் கேட்டு இயேசுவை ஏற்றுக் கொள்ளாத மற்ற பீல் மக்களும் இந்த உபவாச நாட்களில் இரட்சிப்பிற்குள்ளாக வரவும், உயிர்த்தெழுந்த திருநாள் சிறப்பு ஆராதனைகளை தேவன் ஆசீர்வதிக்வும் ஊக்கமாக ஜெபியுங்கள்.

**ஷாலோம் பங்காளர்கள்**

மாதந்தோறும் புதிய ஆதரவாளர்கள் இணையவும், ஆதரவாளர்களுடைய குடும்பங்களுக்காகவும், அவர்களுடைய நோய்கள், கடன் பிரச்சனைகள், பிசாசின் கட்டுகள், மரணப்படுக்கைகள் மாறவும், குழந்தை இல்லாத குடும்பங்களில் தேவன் குழந்தை பாக்கியத்தைக் கொடுக்கவும், வேலை இல்லாத பிள்ளைகளுக்கு தேவன் தக்க சமயத்தில் வேலையைக் கொடுத்து ஆசீர்வதிக்கும்படியாகவும் ஜெபியுங்கள்.

# ஷாலோம் கிளை அலுவலகங்களின் முகவரிகள்

**HEAD OFFICE**

**M/S. SHARING LOVE MISSION,**

New No. 5A/323, Old No. 5/168,-3rd Street, Caldwell Colony,
TUTICORIN-628008 Ph. : 2377737, 2375468, Cell : 9345675468

**CHENNAI BRANCH OFFICE**

**Bro. John Jeyasingh**
No.102-2nd Main Road
Sathya Nagar, Padi,
CHENNAI - 600050.
Cell : 9698244577

**MARTHANDAM BRANCH OFFICE**

**Bro. Selvadurai.G**
Bethel,
25-7/A 1-Block 25, Paruthivilai,
Kannakode, Marthandam - 629165
Cell : 9487689869

**MUMBAI BRANCH OFFICE**

**Bro. Prabhakaran. P.**
C/o. Mr. P.Immanuel,
C-2, Plot No.123-Old Mhada Colony,
Mangalya Co.Op.Society Ltd,
Pokharan Road No.2,
Thane West - 400610
Cell : 9768282699

**NAGERCOIL BRANCH OFFICE**

SHARING LOVE MISSION Branch
Ebenezer Plaza, Parama Street,
WCC Junction,
Nagercoil - 629001
Cell : 9698444522

**MADURAI BRANCH OFFICE**

**Bro. Chandra Paul. S**
6/3, Nellaiappar Puram 7th Street,
Tirunagar (p.o)
MADURAI-625006
Cell : 9698644522

**TIRUNELVELI BRANCH OFFICE**

**Bro. David. R**
56 A/4,-C.S.I Church South Street,
(Upstairs) STC road,
Perumalpuram, Palayamkottai
TIRUNELVELI-627007
Cell 9698844599

**குழந்தை ஆதரவுத் தொகை மற்றும் சமுதாயப்பணி காணிக்கைகளை அனுப்ப...**

வங்கிக் கணக்கின் பெயர் : **SHALOM CHARITY MISSION**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

**Tamilnad Mercantile Bank**

**174100710400061**
**Branch : Tiruchendur Road**
(IFS Code : TMBL0000174)

**AXIS BANK**

**105010100096779 -**
(IFS Code : UTIB0000105)

## காணிக்கைகளை அனுப்பும் வழிகள்

- ❖ தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்துக் கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- ❖ காணிக்கைகளை **E.M.O.** மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அப்படி அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியைக் கொடுக்கும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.
- ❖ **SHARING LOVE MISSION** என்ற பெயருக்கு **D.D.** அல்லது **Cheque** எடுத்து தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு பதிவுத் தபால் அல்லது கொரியர் மூலமாக உங்கள் காணிக்கைகளை அனுப்பலாம்.
- ❖ உங்களது வங்கிக் கணக்கிலிருந்து, **Net Transfer** மூலமாகவும் காணிக்கைகளை கீழ்க்கண்ட எங்களது வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பலாம்.
- ❖ நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க்கண்ட வங்கிகளில் எங்கள் கணக்குகளில் **Cash (or) Cheque (or) D.D.** மூலம் **Deposit** பண்ணலாம்.
- ❖ எங்களது ஷாலோம் கிளை அலுவலகங்களுக்கு நேரடியாக வந்தும் காணிக்கைகளைக் கொடுத்து ஜெபித்துச் செல்லலாம்.

---

வங்கிக் கணக்கின் பெயர் : **Sharing Love Mission**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

---

**Tamilnad Mercantile Bank**
**A/c. No. : 106100710400009 (I F S Code : TMBL0000106)**

---

**AXIS BANK**
**A/c. No. : 105010100094373**
**(IFS Code : UTIB0000105)**

---

**ICICI Bank**
**A/C. No. 613901112799**
**(IFS Code : ICIC0006139)**

---

நீங்கள் ஷாலோம் ஊழியங்களுக்கு வங்கிக் கணக்குகளில் **Cash (or) Cheque (or) D.D.** மூலமாகவோ அல்லது **Net Transfer** மூலமாகவோ காணிக்கை செலுத்தினால், உடனடியாக அந்தத் தகவலை எங்களுக்குத் தெரியப்படுத்த அன்பாய்க் கேட்கிறோம். அப்படி தெரியப்படுத்தாத பட்சத்தில் எங்களுக்கு யார் காணிக்கை அனுப்பியது என்று தெரியாமல் போய்விட வாய்ப்பு உள்ளது. ஆகவே ஆதரவாளர்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தாங்கள் காணிக்கை செலுத்திய விபரத்தினை எங்களுக்குத் தெரிவியுங்கள். தொடர்புக்கு : **9698244522**

அர்ஜெண்டினாவில் இரண்டு ஹெலிகாப்டர்கள் ஒன்றோடு ஒன்று மோதிக் கொண்டன. இந்த பயங்கரமான சம்பவத்தில், தொலை தூர இடங்களில் கஷ்டப்பட்டு உணவும் உறைவிடமும் தேடும் விதமான ரியாலிட்டி ஷோ நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்க சென்று கொண்டிருந்த பிரான்சின் முன்னால் முண்ணனி விளையாட்டு நட்சத்திரங்கள் மூன்று பேர் உட்பட பிரஞ்சு பிரஜைகள் எட்டுபேர் உயிரிழந்தனர்.

முழுமையாக சூரிய சக்தியை மட்டுமே கொண்டு பறக்கும் சோலார் இம்பல்ஸ் – 2 விமானம் உலகை சுற்றிவரும் சாதனைப் பணயத்தை துவக்கியிருக்கிறது. இந்த விமானம் தனது பயணத்தின் இரண்டாம் கட்டமாக இந்தியாவில் அஹமதாபாத் நகரில் 09.03.2015 அன்று வெற்றிகரமாக தரையிறக்கியிருக்கிறது. இந்த விமானம் அடுத்த ஐந்து மாதங்களில் அனைத்து கண்டங்களுக்கும் பயணிக்கவுள்ள இந்த விமானம் பசிபிக் மற்றும் அட்லாண்டிக் பெருங்கடல்களையும் கடக்கவுள்ளது.

09.03.2015 அன்று சீனாவின் யுன்னான் மகாணத்தில் ஏற்பட்ட பெரிய நில நடுக்கத்தில் அநேக வீடுகள் நாசமாயின. வீடுகள் மற்றும் அநேக பொருட்கள் நாசமானாலும் இந்த நில நடுக்கத்தில் உயிர்ச் சேதம் ஏற்பட்டதாக தகவல்கள் இல்லை. தரையிலிருந்து 12 கி.மீ. ஆழத்திலிருந்து இந்த நில நடுக்கம் ஏற்பட்டதாக சீன நில நடுக்க ஆய்வு மையம் தெரிவிக்கிறது.

இதய நோய்களுக்கான முக்கிய காரணங்களில் ஒன்றான இரத்தக் குழாய்கள் கொழுப்பால் அடைபடுதல், தினமும் 3 முதல் 5 காப்பிகள் வரை அருந்துவதன் மூலம் தவிர்க்க முடியும் என்று தென்கொரிய விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

செவ்வாய் கிரகத்தில் ஆய்வு நடத்தும் நாசா விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் அந்தக் கிரகத்தில் மிகப்பெரிய கடல் இருந்திருப்பதற்கான அடையாளங்களைக் கண்டுபிடித்துள்ளனர்.

**கீழ்கண்ட விலாசத்தில் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்**

தலைமை அலுவலகம்

**SHARING LOVE MISSION**
New No. 5A/323, Old.No. 5/168,
Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.

Phone: 0461 - 2375468, 2377737
Cell : 9345675468

பணித்தள அலுவலகம்

**Rt. Rev. Dr. V. DEVADASS**
Founder & General Secretary
Sharing Love Mission
Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat

Ph. : 07043334501
Cell : 09377445468

**email : info@shalommission.in website : www.shalommission.in**

# ஷாலோம் கிராம ஆலயம்

# லிம்பாகேடி

## குஜராத்



இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். குஜராத் மாநிலத்தில் தாகோத் மாவட்டத்தில் பத்தேபுரா தாலுகாவிலுள்ள ஒரு கிராமம் தான் லிம்பாகேடி.

இந்த கிராமத்திலுள்ள ஜனங்கள் இயேசு கிறிஸ்துவைக் குறித்து அறியாமல், மிகவும் அந்தகாரத்திலும் பாவமான வாழ்க்கையிலும் வாழ்ந்து வந்தனர். மேலும் பிசாசின் பிடியில் சிக்கி அநேகர் கஷ்டப்பட்டு வந்தனர். இந்த சூழ்நிலையில் வாழ்ந்தவர்தான் சகோ. ராம்சிங் பாய். இவர் 1994ஆம் ஆண்டு பிசாசின் பிடியில் சிக்குண்டு, மந்திரவாதிகளிடம் சென்றும், மருத்துவமனைக்குச் சென்றும் சுமார் ரூ. ஒரு லட்சம் செலவு செய்தும் பலனில்லை.

இந்தச் சமயத்தில் போரிதா என்ற கிராமத்தில் ஊழியம் செய்து வரும் சகோ. கர்சிங் பாய் அவர்களைக் குறித்துக் கேள்விப்பட்டு, அவர்களிடம் ஜெபிக்கும்படியாக அழைத்துச் செல்லப்பட்டார். சுதேச ஊழியரும் அவருக்கு இயேசு கிறிஸ்துவைக் குறித்து கூறி சுவிசேஷம் அறிவித்து, ஜெபித்தபோது தேவன் பிசாசின் பிடியில் இருந்து உடனடியாக அற்புத விடுதலைக் கொடுத்தார். இந்த அற்புதத்தைப் பெற்ற சகோ. ராம்சிங் குடும்பமாக இயேசு கிறஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார்.

பின்னர் ஊழியம் செய்ய வேண்டும் என்ற வாஞ்சையை தேவன் கொடுக்கவே, தன்னை ஊழியத்திற்கு அர்ப்பணித்து, ஷாலோமில் இணைந்து ஒரு மாத வேதாகம பயிற்சி பெற்று, அபிஷேகம் பெற்று, தனது வீட்டில் கூட்டம் நடத்த ஆரம்பித்தார். அநேகர் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு ஆராதனைக்கு வர ஆரம்பித்தனர். 40க்கும் அதிகமான குடும்பத்தார் தேவனை ஏற்றுக் கொள்ளவே ஆண்டவரை ஆராதிக்க ஒரு ஆலயம் தேவை என உணர்ந்த அவர், தனது சொந்த நிலத்தை ஆலயம் கட்ட காணிக்கையாகக் கொடுத்தார். அந்த இடத்தில் தேவனுடைய நாமம் மகிமைப்படும்படியாக ஒரு அழகிய ஆலயம் கட்டப்பட்டு, 11.03.2015 அன்று பிரதிஷ்டை செய்யப்பட்டது.

இந்த ஆலயம் **சகோ. ஜாண் பிரகாஷ்,** சென்னை அவர்கள் குடும்பத்தின் சார்பில் கொடுக்கப்பட்ட நிதியுதவியின் மூலம் கட்டப்பட்டது.

**ரூ. 3 இலட்சங்கள் (or) ரூ. 2 இலட்சங்கள் மதிப்புகளில்**
**இந்த 2015 ஆம் ஆண்டிற்குள் 100 ஆலயங்களைக் கட்டிக் கொடுக்க**
**முன் வருவோர் தேவை! ஜெபியுங்கள்!**

# பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்

## BLESS A CHILD PROJECT



மாணவியின் பெயர் : **மார்த்தா N. கர்வால்**

தந்தையின் பெயர் : நஹாட்டியா கர்வால்

தாயாரின் பெயர் : சேவ் கர்வால்

பிறந்த நாள் : 10.05.2007

படிக்கும் வகுப்பு : 2nd Std.

சொந்த ஊர் : ஒஸ்க்கா

மாவட்டம் & மாநிலம் : ஜாபுவா, மத்தியப்பிரதேசம்

**மாணவியின் பெற்றோரைப் பற்றிய சில வரிகள்:–** இவளுடைய தந்தை நஹாட்டியா கர்வால் இயேசுவை அறியாத பீல் ஆதிவாசி குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் குடும்பமாக அசுத்த ஆவிகளையும், விக்கிரகங்களையும் வணங்கி, மந்திர பூஜைகள் செய்து வந்தவர். இவருடைய பிள்ளைகள் சுகவீனமாகக் காணப்பட்டார்கள். அநேக மந்திரவாதிகளிடம் சென்று பார்த்தும் பலனில்லை. கடைசியாக ஷாலோம் ஊழியரிடம் சென்று ஜெபித்தபோது, தேவன் இவருடைய பிள்ளைகளுக்கு பூரண சுகத்தைக் கட்டளையிட்டார். பின்பு குடும்பமாக ஆலயத்திற்கு செல்ல ஆரம்பித்தார். வேத வசனங்களை கேட்க கேட்க தேவன் இவர் உள்ளத்தில் கிரியை செய்ய ஆரம்பித்தார். பின்பு இயேசுவை முழுமனதோடு விசுவாசித்து, ஏற்றுக்கொண்டு, ஞானஸ்நானம் பெற்றார். தற்போது ஆண்டவரின் அழைப்பைப் பெற்று தன் சொந்தக் கிராமத்தில் ஊழியம் செய்து வருகிறார்.

**மாணவியைக் குறித்து :–** மார்த்தா நன்றாக படிப்பாள். வேதம் வாசிப்பாள், ஜெபிப்பாள். நடனம் ஆடுவாள். இவளுக்கு கபடி மற்றும் கோ–கோ விளையாடுவது மிகவும் பிடிக்கும். இவளுக்கு 2 சகோதரர்கள் மற்றும் 2 சகோதரிகள் உண்டு.

**ஜெபியுங்கள் :–** இவளுக்காக படிப்பிற்காக, நல்ல சரீர சுகத்திற்காக, பெற்றோர் செய்கிற ஊழியத்திற்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்.

மாணவியைத் தாங்குபவர் :– **Pr. Mohana Sundaram, Chennai.**

### ஜெபித்துத் தாங்க முன்வாருங்கள்

பிரியமானவர்களே! நீங்களும் ஜெபித்து மாதம் ரூ. 700/– கொடுத்து பீல் ஆதிவாசி மாணவரைத் தாங்க முன் வரலாம். நாம் பராமரித்து வரும் 1189 மாணவர்களில் இன்னும் 216 **மாணவ மாணவியர்களுக்கு ஆதரவாளர்கள் தேவைப்படுகிறார்கள்.**

***Shalom Charity Mission*** என்ற பெயரில் இதற்கான காணிக்கைகளை D.D. அல்லது Cheque மூலமாக அனுப்ப அன்பாய் கேட்கிறோம். உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களையும் தாங்கும்படியாக தயவாய் அறிமுகப்படுத்திவையுங்கள்.